SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:3, Issue:12, Pages:56
JULY-2024, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜுலை 2024,
விலை ரூ.20/-



## திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம்

16-07-2024



13-06-2024 அன்று குடும்பத்தினரோடு திருவேங்கடமுடையானைத் தரிசித்த மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு. நாரா சந்திர பாபு நாயுடு அவர்கள் மற்றும் ஆ.மா. அமைச்சர் (எச்.ஆர்., ஐ.டி., ஆர்.டி.ஜி.) திரு. நாரா லோகேஷ் அவர்களுக்கும் தீர்த்தப் பிரசாதம், சித்திரப்படங்களை வழங்கும் தி.தி.தே. இணைச் செயலாட்சித்தலைவர்கள் திரு. வீ. வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள், திருமதி. எம். கௌதமி ஐ.ஏ.எஸ்.(எச்.& இ.) அவர்கள் உடன் உயர்அதிகாரிகள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்



மாத்ராஸ்பர்சாஸ்து கௌந்தேய
சீதோஷ்ணஸுக$_2$து$_3$:க$_2$த$_3$ா: ।
ஆக$_3$மாபாயிநோऽநித்யாஸ்
தாம்ஸ்திதிக்ஷஸ்வ ப$_4$ாரத ॥

குந்தியின் மைந்தனே! தட்பவெப்பம் மற்றும்
சுகதுக்கங்களைக் கொடுக்கக்கூடிய
புலன்களுடன் போக விஷயங்களின்
சேர்க்கைகள் உண்டாகி அழிபவை;
அநித்தியமானவை. ஆகவே, பரதா! நீ
அவற்றைப் பொறுத்துக்கொள்.

– ஸ்ரீமத் பகவத் கீதை 2–14



குருமுகமநதீத்ய ப்ராஹ வேதாநசேஷாந்
நரபதிபரிக்லுப்தம் சுல்கமாதாது காம: ।
ச்வசுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

யவரொரு பெரியாழ்வார் வல்லபதேவனென்கிற
அரசனால் ஏற்படுத்தப்பட்ட பந்தயப் பொருளாகிய
பொற்கிழியைப் பெற எண்ணமுடையவராய்,
ஆசார்யமுகமாக ஒரு கல்வியையும் கற்காமலே
(பரதத்துவ நிர்ணயத்திற்கு வேண்டிய)
வேதங்களெல்லாவற்றையும் (பகவத் கிருபையினால்)
எடுத்துரைத்தாரோ, தேவர்களினால் சேவிக்கத்
தகுந்தவரும், ஸ்ரீரங்கநாதனுக்கு நேராக
மாமனாரும், பிராமண குலத்திற்குத் திலகம்
போன்றவருமான அப்பெரியாழ்வாரை
வணங்குகின்றேன்.

- ஸ்ரீமந்நாதமுநிகள்



## திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
## 18-07-2024 முதல் 20-07-2024 வரை

| | | | |
|---|---|---|---|
| 17-07-2024 | புதன் | ---- | அங்குரார்ப்பணம் |
| 18-07-2024 | வியாழன் | பஞ்சமூர்த்திகளுக்கு ஸ்நபன திருமஞ்சனம் | மாலை : பவித்ர மண்டல பூஜை, ஹோமம் |
| 19-07-2024 | வெள்ளி | க்ரந்தி பவித்ர சமர்ப்பணம் | மாலை : பவித்ர பிரதிஷ்டை |
| 20-07-2024 | சனி | பட்டு பவித்ர சமர்ப்பணம் பவித்ரோத்ஸவம் நிறைவு | பஞ்சமூர்த்திகள் திருவீதி உத்ஸவம் |




வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜுலை 2024

மலர் 03 இதழ் 12


## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| கோவிந்தனைப் போற்றும் கோதை -அமரர் இரா.வ. கமலக்கண்ணன், காஞ்சிபுரம். | 7 |
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப்பாசுரம்: நினைத்ததை நிறைவேற்றும் திருவேங்கடவன் -பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 9 |
| சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: வில் ஏந்திய வேலன் - படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. | 14 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: இளமையை வேண்டிய யயாதி - திரு.எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 16 |
| பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் -திரு. எம்.எஸ். சுகுமார், சென்னை. | 19 |
| உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம் - டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி. | 22 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 24 |
| குருவருள் திருவருள் நல்கும் -முனைவர் ந. மைதிலி, சென்னை. | 31 |
| திருத்தணி முருகா! வழித்துணை வருவாய்! -முனைவர் ச. செந்திலாண்டவன், சென்னை. | 33 |
| 108 திவ்வியதேச வைபவம் : திருக்கள்வனூர் - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 35 |
| எதிகட்கிறைவன் யமுனைத்துறைவன் -திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன், அம்பத்தூர். | 38 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : இராமாநுஜர் - ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 40 |
| ஏகாதசி விரத வழிபாடு - திரு.கிருஷ்ண துளசி, சென்னை. | 43 |
| ஆயுர்வேதம் : பாதாம் -திருமதி வி.உஷா, திருப்பதி. | 45 |
| ராசிபலன்கள் : ஜுலை 2024 -டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 46 |
| நீதிக்கதை : குருவருள் கிடைக்கப் பெற்ற மஹரிஷி -முனைவர் பா. காயத்ரி, சென்னை. | 47 |
| சித்திரக்கதை : தெய்வ நிந்தனை பெரும் பாவம் | 52 |


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : உபய தேவியரோடு திருமலையப்ப ஸ்வாமி (ஆனிவர ஆஸ்தானம்), திருமலை.

பின்னட்டை : ஸ்ரீவேதவியாசர் (சித்திரம்)


*சிறப்பு ஆசிரியர் :*
**திரு. J. சியாமல ராவ்,** ஐ.ஏ.எஸ்.
செயலாட்சித் தலைவர் (F.A.C), தி.தி.தே.
*வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :*
Dr. K. **ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
*பிரதான ஆசிரியர் அலுவலகம்,*
தி.தி.தே. திருப்பதி.
*புகைப்படங்கள் :*
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**



*பிரதிகளுக்கு:*
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை **www.tirumala.org**யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்



உங்களுடன்

# நல்ல குருவை அடைந்திடு!

“கிரியோ கரவஸ்தேப்யோ sப்யர்வீ குர்வீ ததோ sபி ஜகதண்டம்

தஸ்மாதப்யதி குருவ: ப்ரலயோ sப்யசலா மஹாத்மந:”

மலைகள் கனமானவை; அதைவிட பூமி கனமானது; அதனைவிட பிரம்மாண்டம் கனமானது. இவையாவும் பிரளய காலத்தில் அழியக் கூடியவை. ஆனால் அப்பிரளயக் காலத்தினைக் கூட எதிர்கொள்பவர்களே சிறந்த மகான்களாவர். அவர்களே நல்ல குருவாவார்கள்.

ஒரு சிறந்த குரு அமைந்தால் மட்டுமே ஒரு மாணவனால் எதையும் எதிர்நோக்கி முன்னேறிச் செல்ல முடியும். முழுமையான கல்வி கிடைத்திட வேண்டுமெனில் ஒரு குருவின் உபதேசமே மிகவும் முக்கியமானது ஆகும். மகாபாரதப் போரின்போது குருக்ஷேத்திரத்தில் அர்ஜுனன் மனக்கலக்கமுற்று இருந்தான். அச்சமயம் பகவான் ஸ்ரீகிருஷ்ணன் ஒரு சிறந்த குருவாக இருந்து அவனின் மனக்கலக்கத்தைப் போக்கினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஒரு மாணவனின் அறிவுதாகம் குருவினால் மட்டுமே தீர்க்க முடியும். அப்பேற்பட்ட குருவினை நாடிச் செல்வது மாணாக்கனின் முதல் கடமையாகும். குருவானவரும் தன்னிடம் வரும் மாணாக்கனுக்கு நல்லறிவினைப் புகட்ட வேண்டும். இவ்வாய்ப்பும் தகுதியுள்ளவர்களுக்கு மட்டுமே கிடைக்கும்.

இவை மணவாள மாமுனிகள் தாம் அருளிய உபதேச ரத்தின மாலையில் (பாசுரம் – 61) *“ஞானம் அநுட்டானம் இவை நன்றாகவே உடைய ஞான குருவை அடைந்தக்கால்...”* ஆசாரியர்களிடத்தில் அன்பும் பற்றும் கொண்டிருங்கள், அப்படிச் செய்தீரென்றால் ஆதிசேஷன் மீது எம்பெருமான் சயனித்துக் கொண்டிருக்கும் மேலுலகமாகிய அந்தப் பரமபதம் உங்களுக்கு வாய்க்கும்” என்று கூறுகின்றார். அதாவது “குருவிடம் அன்பு செய்யும் சீடர்களுக்கு மோட்சம் நிச்சயம் கிடைக்கும்” என்கிறார்.

வேதாந்த தேசிகரும் தாம் அருளிய அதிகார சங்கிரகம் (பாசுரம் –32) பிரபந்தத்தில் குருவினால் ஒருவன் அடையும் நன்மைகளுக்கு வேறு எதுவும் ஈடாகாது என்கிறார். மாணக்கர்களின் மனங்களில் குடி கொண்டிருக்கும் அஞ்ஞான இருள் நீங்கும் விதமாக அழகிய ஞான விளக்கை ஏற்றுகின்ற குருவுக்கு என்ன கைம்மாறு செய்யலாம் என்பதை அந்த எம்பெருமானும் அறியமாட்டானாம். அவரவர்களுடைய குருவின் பெருமைகளைத் தமது வாயால் சொல்லி மகிழ்வதும், மனதுக்குள் நினைத்து மகிழ்வதும், ஊரறிய உரைத்து மகிழ்வதும் என்று எதைச் செய்தாலும் அது நம் குருவிடம் இருந்து பெற்ற நன்மைக்கு ஈடாகுமோ?” என்று கூறுவதன் மூலம் குருவினால் சீடனுக்குக் கிடைக்கும் நன்மைகள் அளவிட முடியாதது என்பதை அறிய முடிகிறது.

குருவில்லாத மாணவன் குருடனாவான். பார்வையற்ற ஒருவன் முன்னேறிச் செல்ல வேண்டுமானால் அவனுக்கு ஊன்றுகோல் மிக முக்கியமானதாகிறது. அது போன்றே ஒரு மாணவனுக்கு குருவின் வழிகாட்டுதல் அவசியமாகின்றது. இவ்வுலகில் நமக்குப் பிறப்பினை அளிப்பது தாய்தந்தை எனில், அவனுக்கு உலக அறிவினை அளித்து, எதிர்கால வாழ்வின் வழிகாட்டியாக விளங்குவது நல்ல குருவே ஆவார். இங்கு அறிவு என்பது புத்தக அறிவு மட்டுமல்ல, மனித நேயத்தோடு தெய்வீகப் பாதையை அடைவதற்கும் குருவே வழிகாட்டியாகத் திகழ்கிறார்.

நல்ல குருவை அடைந்திடு! தெய்வீகப் பாதையில் சென்றிடு!!

# கோவிந்தனைப் போற்றும் கோதை



***''வேதம் அனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ்''*** – என்று போற்றப்படும் கோதை தமிழில் 30 திருப்பாவைப் பாசுரங்களும், 143 நாச்சியார் திருமொழிப் பாசுரங்களும் இடம் பெற்றுள்ளன. இவற்றுள், திருப்பாவையில், ***''கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா!''*** – (திருப்பாவை. 27) என்றும், ***''குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா!''*** – (28) என்றும், ***''கோவிந்தா''*** – (29) என்றும் – தொடர்ந்து 3 கோவிந்த நாமம் அருளிச் செய்யப்பட்டுள்ளன.

நாச்சியார் திருமொழி எட்டாம் திருமொழி – 10 பாசுரங்களிலும் திருமலைப் பெருமானிடம் ஆண்டாள், மேகத்தைத் தூது விடும் வைபவம் பேசப்படுகிறது.


மழைக் காலம் வந்ததும் மேகங்கள் தோன்றி முழங்கின. பெருமாளும் ஆண்டாளை விட்டுப் பிரிந்த போது, மழைக் காலத்தில் திரும்பி வருவதாகச் சொல்லிச் சென்றான். ஆயினும் அதன்படி வரவில்லை, மேகங்களே வந்தன. அவற்றைப் பார்த்துச் சில கேள்விகள் கேட்டதும், அவையும் பதில் சொல்லவில்லை. அவன் வாழும் திருமலையிலே நீங்களும் வசிப்பதால் உங்களுக்கும் அவனுக்கும் ஒரு தொடர்பு உண்டு, எனவே என் நிலைமையை நீங்களே அவனிடம் தூது சென்று அறிவிக்க வேண்டும் என்று மேகங்களைத் தூது விடுகிறாள். (காமத்தால் வருந்துவோர் அறிவற்ற மேகம் முதலியவற்றைத் தூது விடுவர். இங்குக் காமம் என்பது பரமபுருஷ விஷயமான பக்தியே ஆகும்).

***விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்***
***தெண்ணீர் பாய் வேங்கடத்தென் திருமாலும் போந்தானே...***

வானம் முழுவதும் நீலநிற மேற் கட்டி விரித்துக் கட்டியது போல் உள்ள மேகங்களே! தெளிந்த அருவிகள் பாயும் திருமலையில் உள்ள பெருமானும் உம்முடன் எழுந்தருளினோம். கண்ணீர் அரும்ப வருந்தும் என் பெண்மையை உரு அழிக்கும் இது, அவருக்குப் பெருமையோ? என மேகங்களிடம் வினவுகிறாள்.

***மாமுத்த நிதி சொரியும் மாமுகில்காள்!***
***வேங்கடத்துச்***
***சாமத்தின் நிறம் கொண்ட தாடாளன்***
***வார்த்தை என்னே!***

முத்துகளையும் பொன்னையும் பொழியும் காளமேகங்களே! திருமலையில் எழுந்து அருளியுள்ள நீல நிறமுடைய பெருமானிடமிருந்து செய்தி உண்டோ? நான் காமத்தீயால் வருந்தி இருப்பேனோ?



## கோதையின் கிளி

திருப்பாவையில் 27, 28,29 ஆகிய பாசுரங்களில், நாச்சியார் திருமொழியில் 10-7, 12-4, 13-9 ஆகிய பாசுரங்களிலும் கோவிந்தன் என்னும் இத்திருநாமம் அருளப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக. ஆண்டாள் வளர்த்த கிளி, எப்போதும் கூட்டில் இருந்து, "கோவிந்தா, கோவிந்தா" என்று திருமலைப் பெருமானின் திரு நாமத்தைக் கூறுவது வழக்கம்.



*குளிரருவி வேங்கடத்து என் கோவிந்தன் குணம் பாடி அளியத்த மேகங்காள் ஆவி காத்திருப்பேனே*

குளிர்ந்த அருவிகள் உள்ள திருமலையில் காட்சிதரும் என் கோவிந்தனின் திருக்கல்யாண குணங்களைப்பாடி, என் உயிரைக்காத்திருக்க இயலுமோ? "குளிரருவி வேங்கடம்" – என்னுடைய இந்தத் தாபமும், அவனுடைய குளிர்ந்த அருவிகளை உடைய திருமலையை நினைத்தவுடன் என் எல்லாத் தாபங்களையும் ஆற்றும் திவ்விய தேசமன்றோ அது. திருமலையில் தனது திருமேனியில் பிராட்டி எழுந்தருளப் பெற்ற திருமார்பு படைத்த பெருமையுடைய சுவாமிக்கு என் விருப்பத்தைத் தெரிவியுங்கள் என்று தாயாரைத் தன் திருமார்பில் தாங்கியிருக்கும் இருப்பையும் *''...வேங்கடத்துத் தன்னாகத் திருமங்கை தங்கிய சீர்மார்வர்க்கு''* என்று கூறுகின்றாள்.

திருமலையில் தேன் நிறைந்த மலர்கள் சிதறும்படி திரளாக வானிலேறிப் பொழியும் மேகங்களே! ஆணான பிரகலாதனுக்கு உதவியது போல, பெண்ணான எனக்கு உதவக் கூடாதா? என்று கேட்டேன் என்று சுவாமியிடம் கூறுங்கள் என்று கூறி, திருமலையில் திரியும் மேகங்களே! அப்பெருமானுடைய திருவடிகளில் அடியேன் சொல்லும் விண்ணப்பம் எதுவெனில், அப்பெருமான் ஒருநாளாகிலும் வந்து கூடினால் தான் என் உயிர் நிலைக்கும் என்று கூறுங்கள் என்பதனை *"... வேங்கடத்துச் செங்கண்மால் சேவடிக்கீழ், அடிவீழ்ச்சி விண்ணப்பம்"* என்று பாசுரமிடுகின்றாள்.

*.... வேங்கடத்துப் போர்காலத்தெழுந்தருளி*
*பொருதவனார் பேர் சொல்லி நீர் காலத்தெருக்கினம்*
*பழ இலை போல் வீழ்வேனை*

மழைக்காலத்தில் திருமலையில் எழும் மேகங்களே! போர் செய்து வென்ற பெருமானின் திருநாமங்களைப் பாடி, மழைக்காலத்தில் எருக்கம் பழுப்புகள் விழுவது போல ஒசிந்து விழும் எனக்கு ஒருவார்த்தை சொல்லமாட்டாரோ?

*...வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!*
*பாம்பணையான் வார்த்தை என்னே!... ஓர் பெண்*
*கொடியை வதை செய்தான், என்னும்*
*சொல் வையகத்தார் மதியாரே!*

பாம்பணையான் – பாம்புக்கு நாக்கு இரண்டு, இவனுக்கும் அது போல, அவன் பிரிவால் உயிர்நீங்கும் நிலை. பெண்ணைக் கொலை செய்தான் என்னும் சொல்லை இவ்வுலகினர் மதியாரே, திருநாள் சேவித்துவிட்டுச் செல்வார் போன்று அன்றி, திருமலையில் நித்தியவாசம் செய்யும் மேகங்கள் "வேங்கடக்கோன் விடுதூதில் விண்ணப்பம்... கோதை தமிழ் ஆகத்து வைப்பார் அவர் அடியார் ஆகுவரே!" என்று கோதையார் தலை கட்டுகிறார்.

**– அமரர் இரா.வ.கமலக்கண்ணன், காஞ்சிபுரம்**

### வாகன ஓட்டுனர்களின் கவனத்திற்கு...

**திருமலை மலைவழிச் சாலையில் வாகனம் ஏறும் பொழுது 28 நிமிடத்திற்கு முன்னதாக ஏறினாலும், இறங்கும் பொழுது 40 நிமிடத்திற்கு முன்னதாக இறங்கினாலும் மீண்டும் மலைவழிச் சாலையில் செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது.**

ஆனி மாதத்திற்கு ஜேஷ்ட மாதம் என்று பெயர். இந்த மாதத்தில் பற்பல விசேஷங்கள் இருக்கின்றன. சக்கரத்தாழ்வார் ஜெயந்தி, பெரியாழ்வார் திருநட்சத்திரம், நாதமுனிகள் திருநட்சத்திரம் முதலிய சிறப்புகளோடு பல்வேறு பெருமாள் கோயில்களில் உற்சவங்களும் இம்மாதத்தில் உண்டு.

ஆனி மாதத்தில் சோதி நட்சத்திரம் என்று சொல்லப்படும் சுவாதியில் அவதரித்தவர் பெரியாழ்வார். ஆழ்வார்களில் அதிக பாசுரங்களை இயற்றியவரும் அல்ல. அதைப்போலவே காலத்தில் முதல் ஆழ்வார்கள் தான் முதலில் அவதரித்தவர்கள். ஆயினும் இவரைப் பெரியாழ்வார் என்று வைணவ மரபில் குறிப்பிட என்ன காரணம் என்று பார்க்க வேண்டும்.

இவர் பகவான் மீது கொண்ட பக்தியை விட பரிவு அதிகம். இந்த உலகத்தில் தங்கள் முன்னே பகவான் வந்து தோன்றினால், அதைப் பார்த்து மகிழ்ந்து, பல்லாண்டு பாடுவார்கள். ஆனால் பெரியாழ்வார் காலம் நடையாடும் தேசத்தில் இப்படிக் கண்ணேறு (கண் திருஷ்டி) ஏற்படும் படியாக வரலாமா? என்று தாயின் பரிவோடு பகவானை வாழ்த்திப் பல்லாண்டு பாடியதால் விஷ்ணு சித்தரான இவருக்கு பெரியாழ்வார் என்னும் பெயர் வந்தது.

# நினைத்ததை நிறைவேற்றும் திருவேங்கடவன்

- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963.

இவருக்கு விஷ்ணு சித்தர் என்கிற பெயரும் ஒரு விதத்தில் காரணப் பெயர்தான். வில்லிபுத்தூர் பட்டர் என்று தான் இவரைக் கொண்டாடுகிறார்கள்.

ஏன் விஷ்ணு சித்தர் என்று பெயர் வந்தது என்றால், இரண்டு காரணங்கள். முதல் காரணம், சதா சர்வ காலமும் விஷ்ணுவை தம் சித்தத்தில் வைத்திருப்பார். இரண்டாவது காரணம் பகவான் விஷ்ணுவின் சித்தத்தில் இந்த ஆழ்வார் நிலைத்து இருப்பார். இதற்கு என்ன பிரமாணம் என்று கேட்கலாம்.

திருவேங்கடவனைக் குறித்து பெரியாழ்வாரின் திருமொழியின் கடைசித் திருமொழியில் சரணாகதி அடைகின்றார். அதிலே ஒரு அதி அற்புதமான பாசுரம்.



பொன்னைக் கொண்டு உரைகல்மீதே
நிறமெழவுரைத்தாற்போல்
உன்னைக் கொண்டு என்நாவகம்பால் மாற்றின்றி
உரைத்துக் கொண்டேன்
உன்னைக் கொண்டு என்னுள்வைத்தேன்
என்னையும் உன்னிலிட்டேன்
என்னப்பா! என்னிருடீகேசா! என்னுயிர்க்காவலனே

இந்தப் பாசுரத்தில் "உன்னைக் கொண்டு என்னுள்வைத்தேன் என்னையும் உன்னிலிட்டேன்" என்பதால் விஷ்ணு சித்தர் என்ற பெயரின் பொருத்தம் இவர் வாக்காலேயே தெளிவாகிறது.

இவர் பாடிய பெரியாழ்வார் திருமொழியில் முதல் பகுதி கண்ணனின் பிள்ளைத்தமிழ். இந்தப் பிள்ளைத் தமிழில் கண்ணனைப் பற்றிப் பாடினாலும் கூட, பல திவ்ய தேசங்களைப் பற்றியும் பாடுகின்றார். அதில் இரண்டாம் பத்து ஆறாம் திருவாய்மொழி "வேலிக் கோல் கொண்டு வா" என்ற பதிகம்.

கண்ணன் தலையை வாரிக் கொண்டான். மலர் சூட்ட வேண்டும் என்பதற்காக தாய் யசோதை உள்ளே செல்கின்றாள். மாடு கன்றுகளை மேய்க்க ஆயர் சிறுவர்கள் சாரி சாரியாகச் சென்று கொண்டிருக்கிறார்கள். அதைப் பார்த்து விட்டான் கண்ணன்."உள்ளே போன அம்மா எப்பொழுது தனக்கு மலர் கொண்டு வருவது? தான் எப்பொழுது இந்தப் பிள்ளைகளோடு செல்வது" என்று துடிக்கின்றான்.

அப்பொழுது கன்றுகளை மேய்ப்பதற்கு ஒரு கோல் வேண்டும் அல்லவா. "எனக்கு ஒரு கோல் வேண்டும். நானும் மற்றவர்களோடு சென்று மாடுகள் மேய்க்க வேண்டும் சீக்கிரம் கோல் கொண்டு வா" என்று தாயைக் கேட்டு அடம் பிடிக்கின்றான்.

பிள்ளைகளோடு கண்ணனை மாடு கன்றுகளை மேய்க்க அனுப்ப யசோதைக்குச் சம்மதம் இல்லை. அதனால் அப்போதைக்கு கண்ணனை சமாதானப்படுத்துகிறாள்.

## ஆனிவர ஆஸ்தானம்

தமிழ் மாதமான ஆனி மாதம் இறுதியில் நடைபெறும் விழாவானதால் "ஆனிவர" ஆஸ்தானம் என்று கூறுவர். சமஸ்கிருதத்தில் "ஆஸ்தானம்" என்றால் அரசாங்க நீதிமன்றம் என்று பொருள்படும். அதாவது ஆனிமாதத்தில் நடைபெறும் திருவேங்கடமுடையானின் நீதிமன்றம் எனும் பொருளைக் குறிக்கும்.பழைய கணக்குகளை நிறைவு செய்து, புதிய கணக்குகளைத் தொடங்கும் நாளாகும். திருமலையில் தி.தி.தே. அதிகாரிகள் நிதி மந்திரியாகச் செயலாற்றுகிறார்கள். அன்றைய தினம் திருமலையப்பனுக்கு வரவு செலவு கணக்குகள் அனைத்தையும் ஒப்படைப்பர்.

பழைய கணக்கினை ஒப்படைத்தல், புதிய கணக்குகளை ஆரம்பித்தல் என்ற இந்த நிகழ்வானது கர்ம வினைகளின் தொடக்கத்தையும், அதனுடைய முடிவினையும் குறிப்பதாக அமைந்துள்ளது. மனிதனின் வாழ்க்கை எனும் புத்தகத்தில், தாம் செய்யும் புண்ணியங்கள் வரவாகவும், பாவங்கள் செலவாகவும் கணக்கெடுக்கப்படுகிறது. தினந்தோறும் எல்லா உயிர்களின் பாவபுண்ணியக் கணக்குகளை யமதர்ம ராஜா மற்றும் சித்திரகுப்தன் மாயபுத்தகத்தில் குறித்து வைத்துக் கொள்கின்றார். இறுதியில் ஒவ்வொரு உயிரும் தம் கணக்கு வழக்குகளை அந்த எம்பெருமானிடம் முறையிட வேண்டிய கட்டாயம் உள்ளது. எம்பெருமானின் அருளைப் பெற்று, இந்த கலி புருஷனின் தீய சக்திகளிடம் இருந்து விலகி பாவங்களை விடுத்து பக்தி, பிரபத்தி, சரணாகதி அடைந்து புண்ணிய புருஷர்களாக வாழ வேண்டும்.



“ஆகா நீ கேட்கின்ற கோல் இங்கேதான் வைத்திருந்தேன். காக்கா எடுத்துச் சென்று விட்டது என்று சொல்லி அந்தக் காக்காயை அழைத்து, என்னுடைய பையன் வேலைக்குப் போக வேண்டும் அல்லவா, சீக்கிரம் ஒரு கோல் கொண்டு வந்தால் தானே அவன் நேரத்திற்குச் செல்ல முடியும்?” என்று காக்கையை அழைப்பது போல சுவாரஸ்யமாக பாசுரங்களை அமைத்திருக்கிறார்.

அதில் ஒன்பதாவது பாசுரம் திருவேங்கட வனைக் குறித்த பாசுரம். அந்தப் பாசுரம் கீழே இருக்கின்றது.

*தென்னிலங்கை மன்னன்சிரம்தோள் துணி செய்து*
*மின்னிலங்கு பூண் விபீடண நம்பிக்கு*
*என்னிலங்கு நாமத்தளவும் அரசென்ற*
*மின்னிலங் காரற்கு ஓர் கோல்கொண்டு வா*
*வேங்கட வாணற்கு ஓர் கோல் கொண்டுவா*

தென் இலங்கை – அழகிய லங்கைக்கு, மன்னன் – அரசனாகிய இராவணனுடைய, சிரம் – தலைகளையும், தோள் – தோள்களையும், துணி செய்து – (அன்பினால்) துணித்துப் போகட்டும், மின் இலங்கு – ஒளி வீசுகின்ற; பூண் – ஆபரணங்களை அணிந்த விபீடணன் நம்பிக்கு விபீஷணாழ்வானுக்கு; என் இலங்கு நாமத்து அளவும் – என் பெயர் பிரகாசிக்கும் அளவும், அரசு – ராஜ்யம் (நடக்கக் கடவது), என்ற – என்று அருள் செய்து, மின் இலங்கு ஆரற்கு – மின்னல் போல் விளங்குகின்ற ஹாரத்தையுடையவனுக்கு ; ஓர் கோல் கொண்டு வா; வேங்கடம் திருமலையில் வாணற்கு – வாழ்ந்தருளுமவனுக்கு ஓர் கோல் கொண்டு வா.

முதலில் இந்தப் பாசுரத்தின் பொருளைக் காண்போம். கண்ணன்தான் வேங்கடவன். இதைப் பல ஆழ்வார்களும் பாடி இருக்கின்றார்கள். “குன்றம் ஏந்தி குளிர் மழை காத்தவன்”, “சென்று சேர் திருவேங்கட மாமலை” என்றதால், அந்த கண்ணன் தான் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக திருமலையில் எழுந்தருளி இருக்கிறான்.

வேங்கடத்தில் நித்திய வாசம் செய்கின்றவன் என்பதால் அவனை வேங்கடவாணன் என்று அழைக்கின்றார் பெரியாழ்வார். அவன் மின்னலைப் போல ஜொலிக்கின்றான். அந்த ஜொலிப்புக்குக் காரணம் அவன் அணிந்திருக்கக் கூடிய பல வகையான ஆபரணங்களேயாகும்.

**பிரம்மோத்ஸவத்தில் கருட சேவையின் போது மூலவருக்கு அணிவிக்கின்ற அற்புதமான காசு மாலையும், பல வகையான ஆபரணங்களையும் திருமலையப்ப ஸ்வாமி அணிந்து கொண்டு காட்சி தருவது ஒரு மின்னலே கருட வாகனத்தின் மீதேறி வருவது போல இருக்கும். அப்படிப்பட்ட எம்பெருமான் தன்னை வந்து சரணடைகிறவர்களுக்கு கேட்காமலேயே ஐச்வர்யத்தை அள்ளித் தருகிறான். அவர்கள் மனதில் என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறார்களோ அந்த மனோரதத்தை அவர்கள் வாய்விட்டுச் சொல்லாமலேயே நிறைவேற்றிக் கொடுக்கிறான்.**



அதைப்போல அவர்களுடைய எதிரிகளை அவர்கள் எப்பேர்பட்ட பலசாலியாக இருந்தாலும் அழிக்கிறான். இதைத்தான் முதல் இரண்டு வரிகள் சுட்டிக் காட்டுகின்றன.

தென்னிலங்கை கோன் என்று இராவணனை மிகவும் கவனமாகக் குறிப்பிடுகின்றார் பெரியாழ்வார். காரணம் அவன் வாங்கிய வர பலம் அப்படி. அந்த வரத்தின் சக்தியில் அறத்தோடு நின்றிருந்தால் அவனுக்கு இத்தனை துன்பங்கள் நேர்ந்திருக்காது. ஒரு தலைக்கு பத்து தலை இருந்தும், ஒரு தலையும் நிற்கவில்லையே!

பெரியாழ்வாரின் திருமகளான ஆண்டாளும் தன் தந்தையின் வார்த்தைகளின் அமைப்பில் பாசுரமிடுகின்றாள் ***''தென்னிலங்கை கோமானைச் செற்ற மனத்துக்கு இனியான்''*** என்று இராவணனை குறிப்பிடுகின்றாள்.

தன்னை ஆச்ரயித்த வீடணனைக் காக்கவும், இலங்கைக்கு நல்லதோர் அரசனைக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் விபீஷண ஆழ்வாருக்கு ராஜ்ய அபிஷேகம் செய்கின்றார். இதை வால்மீகி எழுதுகின்ற பொழுது, விபீஷணனுக்கு கடற்கரையிலேயே லட்சுமணனைக் கொண்டு அபிஷேகம் செய்து இலங்கை ராஜ்ஜியத்தை பெருமாள் உறுதி செய்து விட்டார்.

விபீஷணனுக்கு மனதில் அந்த ஆசை இருந்து இருக்கலாம். ஆனால் அவன் இராமனிடத்தில் அடைக்கலம் தான் தேடி வந்தான். தனக்கு இலங்கை அரசு வேண்டும் என்ற பிரார்த்தனையோடு வர வில்லை. ஆயினும் கூட மனதுக்குள் உள்ளிருப்பதை ஊடுருவிப் பார்த்து ஒரு குழந்தையின் மனோ ரதத்தை தாய் நிறைவேற்றுவது போல பெருமாள் இலங்கை ராஜ்யத்தைத் தருகின்றார்.

அதனால்தான் பின்னால் போர்க்களத்தில் "இன்று போய் நாளை வா" என்று இராவணனிடம் சொல்லுகின்ற பொழுது, "நீ சீதையை விட வேண்டும். அதே நேரத்தில் இனி நீ இலங்கைக்கு அரசன் அல்ல. வீடணன் தான் அரசன். அந்த அரசின் கீழ் நீ வாழ வேண்டும்" என்று நிபந்தனை சொல்லி அனுப்புகிறார்.

இங்கே விபீடண நம்பிக்கு என்ற அற்புதமான பதம். நம்பி என்றால் இராமனை நம்பி வந்தவன். சம்பிரதாயத்தில் நம்பி என்றால் உபகாரகன் என்று பொருள். நம்பி என்ற சிறப்பு எம்பெருமானுக்கும் உண்டு. ஆழ்வார்களுக்கும் உண்டு. ஆசாரியர் களுக்கும் உண்டு.

திருக்குருகூர் நம்பி என்பது நம்மாழ்வாரைக் குறிக்கும். திருக்குறுங்குடி நம்பி என்பது பெருமாளைக் குறிக்கும். திருக்கோட்டியூர் நம்பி என்பது ஆசாரியரைக் குறிக்கும். எனவே மூவருக்கும் நம்பி என்ற சொல் உண்டு. நம்பி என்பதற்கு உபகாரகன் என்ற பொருள்படி, விபீடணன் எப்படி நம்பியானான்? அவன் பெருமானை நம்பி வந்ததோடு, இலங்கையிலே யுத்தம் செய்வதற்கு உபகாரமும் செய்கின்றான். இதைக் கம்பன் இராமனின் திருவாக்கிலே சொன்ன ஒரு கட்டமும் உண்டு. அப்போது இராமன் சொன்ன சொல் "இந்த வெற்றி வீடணன் தந்த வெற்றி".

***ஆடவர் திலக! நின்னால் அன்று; இகல்***
***அனுமன் என்னும்***
***சேடனால் அன்று; வேறு ஓர் தெய்வத்தின்***
***சிறப்பும் அன்று;***
***வீடணன் தந்த வென்றி ஈது என விளம்பி***
***மெய்ம்மை***
***ஏடு அவிழ் அலங்கல் மார்பன் இருந்தனன்,***
***இனிதின் இப்பால்.***

பெருமாளின் வெற்றிக்கு துணை நின்றவன் என்பதனால் விபீடண நம்பி என்று பெரியாழ்வார் இங்கே குறிப்பிடுகின்றார். ஆக, இங்கே சாரமான பொருளாக விளங்குவது,

1) அந்த இராமன் தான் கண்ணனாக அவதாரம் எடுத்து வந்தவன்.

2) அந்த கண்ணன் தான் இப்பொழுது கலி யுகத்தில் திருமலையிலே நிற்பவன்.

3) அவன் ஆஸ்ரித விரோதிகளை அழித்து அவர்கள் கேட்காமலேயே பலன் தருபவன்.

இதைத்தான் பெரியாழ்வார் இந்தப் பாசுரத்திலே அழுத்தமாகச் சொல்லுகின்றார்.

நாமும் திருமலை அப்பன் முன் நின்றால் போதும். வாய்விட்டு அவனிடத்தில் கேட்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. மனதில் இருப்பதை மறக்காமல் நிறைவேற்றித் தருவான் திருவேங்கடவன்.

பாசுரம் அறிவோம்...

## ஸ்ரீபட்டாபிராமர் ஸ்வாமி, வால்மீகி புரம்

**ஆந்திர மாநிலம், அன்னமய்யா மாவட்டத்தில் திருப்பதியிலிருந்து சுமார் 100 கி.மீ. தூரத்தில் வால்மீகி புரத்தில் ஸ்ரீராமபிரான் ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமியாக கொலுவீற்றிருக்கின்றார். ஜாம்பவான் அயோத்தி சென்று ஸ்ரீராமபிரானை தரிசித்து விட்டு மீண்டும் திரும்பி வரும்போது ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி விக்ரகம் கிடைத்தது. அங்கேயே ஆலயம் அமைத்து ஸ்வாமியைப் பிரதிஷ்டை செய்தாராம். இந்த ஆலயத்தில் ஸ்ரீராமன் சீதாதேவியோடு சகோதரர்களுடன் காட்சியளிக்கின்றார்.**

# வைணவக்குறுக்கெழுத்துப் புதிர் -96

## இடமிருந்து வலம்

1. பக்தன் இட்ட செங்கல் மீது பண்டரி புரத்தில் வீற்றிருப்பவர் ..........(7)
4. திருச்சி சேலம் சாலையில் விஸ்வ ரூப அனுமன் அருளும் தலம்...(5).
5) பரந்தாமன் எடுத்த பன்றி அவதாரம்....(4)
7) ஜானகி தேவியின் தந்தை....(4)
8) ....(5) ஜீவாத்மா அல்ல
10) ....(4) அமரரேறே! ஆயர்தம் கொழுந்தே!
13) ....(4)கள் பன்னிருவர்.
15) ஸ்ரீகிருஷ்ணரின் மகிமைகளை விவரிக்கின்ற புராண நூல்...(5)
16) திருமகளின் பதி.....(4)
17) அரக்கர்களை அழிக்க உதவும் வலுவான ஆயுதம்...(6)

## வலமிருந்து இடம்


3. .......(6) ஸ்ரீராமாநுஜருக்கு முன் திருவரங்கத்தின் ஆசாரியர்.
6) காஞ்சியில் கருணாகரப் பெருமாள் உள்ள திருத்தலம்.......(7)
12) மறைகள்........(5)
14) அர்ச்சை வடிவில் இறைவன் காட்சி அளிக்கும் இடம்.........(5)
18) ........(4) திருத்தலத்தில் வடிவழகிய நம்பி புஜங்க சயனத்தில் காட்சியளிக் கிறார்.

## மேலிருந்து கீழ்

1) .....(5) சாரதியாக பரந்தாமன் பணி புரிந்தார்.
2) ஆதிமூலமே என்றழைத்த யானை..........(6)
11) குசேலரின் பெயர்.........(4)
12) யாகம் என்பது........(3)
14) "கோ" க்களின் தலைவன்.........(3)

## கீழிருந்து மேல்

7) உலக நாயகன்...........(5)
9) பெரும் தவம் இவனே.........(4)




**தொகுப்பு : திரு.டி.ஆர், மனோகர், ரஞ்சாவூர், 99426 44807**

புதிருக்கு விடை அறிய 20ம் பக்கம் பார்க்கவும்...

17) .....(4)திருத்தலத்தில் சக்கரவர்த்தித் திருமகனாக ஸ்ரீராமர் காட்சியளிக்கின்றார்.
18) காஞ்சி திருக்குளத்தில் சயனித்து 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை திவ்ய தரிசனமளிப்பவர்....(7)

## மங்கள சுலோகங்கள்

கல்யாணாத்புதகாத்ராய
காமிதார்த்தப்ரதாயினே|
ஸ்ரீமத்வேங்கடநாதாய
ஸ்ரீநிவாஸாய மங்களம் ||

மங்களமானதும்
வியப்பளிப்பதுமான
உடலையுடையவனும், விரும்பும்
செல்வங்களை வழங்குபவனும்,
வேங்கடத்திற்கு அதிபதியுமான
ஸ்ரீநிவாஸனுக்கு மங்களம்.





## சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்

# வில் ஏந்திய வேலன்



- படிமக்கலைஞர் திரு.ப.சரவணன்,
குடந்தை, 8610819456.

படைப்புக் கடவுளான பிரம்ம தேவனின் புதல்வர்கள் தட்சன், காசிபன் ஆவர். இவர்களுள் தட்சன் சிவபிரானுக்கு மாமனார் ஆவான். இவன் அகந்தை காரணமாக இறுதியில் சிவனால் உருவாக்கப்பட்ட வீரபத்திரரால் கொல்லப்பட்டான்.

அடுத்து காசிபனும் கடும் தவம் புரிந்து சிவனிடம் பல வரங்களைப் பெற்றான். ஒரு நாள் அசுர குரு சுக்கிரனால் ஏவப்பட்ட மாயை எனும் பெண்ணின் அழகில் மயங்கி தான் பெற்ற தவ வலிமையை இழந்தான்.

இதைத் தொடர்ந்து காசிபனும், மாயை எனும் அசுரப் பெண்ணும் முதலாம் சாமத்தில் மனித உருவத்தில் இணைந்து மனிதத் தலையுடைய "சூர பத்மனும்" (தட்சனே தனது மறு பிறவியில் சூரபத்ம னாகப் பிறந்தான் என்பது புராண வரலாறு), இரண்டாம் சாமத்தில் சிங்க உருவில் இருவரும் இணைந்து சிங்கமுகமுடைய "சிங்கமுகாசுரனும்", மூன்றாம் சாமத்தில் யானை உருவில் இணைந்து யானை முகமுடைய "தாரகாசுரனும்", நான்காம் சாமத்தில் ஆட்டுருவத்தில் இணைந்து ஆட்டுத் தலையுடைய "அஜமுகி" எனும் அசுரப் பெண்ணும் பிறந்தனர்.

காசியபர் தன் பிள்ளைகளிடம், "குழந்தைகளே வடதிசை நோக்கிச் சென்று சிவபெருமானை நோக்கித் தவம் செய்து வேண்டிய வரங்களைப் பெற்று வாழுங்கள் என்று உபதேசம் செய்தார். அதன்படி நால்வரும் கடும் தவமிருந்து சிவபெருமானிடம் பல வரங்களைப் பெற்றனர்.

இவர்களுள் சூரபத்மன் சிவனை நோக்கி தனக்குச் சாகாவரம் வேண்டும் எனக் கேட்டான். பிறந்தவன் மடிந்தே தீர வேண்டும் என்ற சிவன், எந்த வகையில் அவனுக்கு அழிவு வர வேண்டும் எனக் கேட்டார். சூரபத்மன் புத்திசாலித்தனமாக ஒரு பெண்ணின் வயிற்றில் பிறக்காத பிள்ளையால்தான் தனக்கு அழிவு வர வேண்டும் எனக் கேட்டான். பெண்ணையன்றி வேறு யாரால் ஜீவர்களை உற்பத்தி செய்ய முடியும் என்பது அவனது கணக்கு. இந்த வரத்தைப் பெற்ற சூரபத்மனும் அவனுடன் பிறந்தவர்களும் தன் குலகுருவான சுக்ராச்சாரி யாரிடம் ஆசி பெற்று இந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களையும் சிறையில் அடைத்து, தம்மைப் போல் பலரை உருவாக்கி அண்டசரா சரங்கள் எல்லாவற்றையும் ஆண்டு வந்தனர்.

அசுரர்களின் கொடுமையைத் தாங்க முடியாத மற்ற தேவர்கள், கயிலாயம் சென்று சிவ பெருமானிடம் சூரபத்மனிடமிருந்து தங்களைக் காக்கும்படி முறையிட்டனர். சிவனும் அவர்களைக் காப்பாற்றும் நோக்குடன் பார்வதியின் தொடர்பின்றி தனது ஆறு நெற்றிக்கண்களைத் திறக்க (சிவனுக்கு ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம், ஞானிகளுக்கு மட்டும் தெரியக் கூடிய சூட்சமமான அதோ முகம் என்று ஆறு

முகங்கள் உண்டு) அவற்றிலிருந்து தோன்றிய ஆறு தீப்பொறிகளையும் வாயு, அக்னி பகவான்கள் ஏந்திச் சென்று சரவணப் பொய்கையில் மலர்ந்திருந்த தாமரை மலர்கள் மீது சேர்த்தார்கள். அத்தீப்பொறிகள் ஆறும் ஆறு குழந்தைகளாகத் தோன்றின.

அந்த ஆறு குழந்தைகளையும் ஆறு கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி சீராட்டி வளர்த்தனர். இந்த ஆறு திருமுகங்களும் ஞானம், ஐஸ்வர்யம், அழகு, வீரியம், வைராக்கியம், புகழ் எனும் ஆறு குணங்களைக் குறிக்கின்றது. பிரணவ சொரூபியான முருகனிடம் காக்கும் கடவுள் முகுந்தன், அழிக்கும் கடவுள் ருத்ரன், படைக்கும் கடவுள் பிரம்மன் ஆகிய மும்மூர்த்திகளும் அடங்குவர். மேலும், முருகப் பெருமான் சிவாக்னியில் தோன்றியவர் ஆதலால் ஆறுமுகமே சிவம், சிவமே ஆறுமுகம் என்பதுண்டு. அந்த ஆறு



சிவனை நோக்கி அக்னியில் நின்று தவம் இயற்றும் யானை முகம் கொண்ட தாரகாசுரன் சிற்பம் - திருப்பரங்குன்றம்

குழந்தைகளையும் பார்வதி கட்டி அணைக்க, அவர்கள் ஒரு மேனியாக வடிவம் கொண்டு ஆறு முகங்களும் இரு கரங்களும் கொண்ட முருகப் பெருமானாகத் தோன்றினர். இத்திருவுருவைப் பெற்றதால் ஆறுமுக ஸ்வாமி என்ற பெயர் முருகப் பெருமானுக்கு ஏற்பட்டது. அத்துடன் இந்த ஆறு குழந்தைகளையும் பார்வதி ஒரே குழந்தையாக ஸ்கந்தம் (சேர்த்தல்) செய்ததால் முருகன் ஸ்கந்தப் பெருமான் ஆனார்.

ஒரு சமயம் முருகப் பெருமான் தேவகுரு பிரகஸ்பதி மூலம் அசுரர்களின் வரலாற்றினை அறிந்தார். அதனைத் தொடர்ந்து அசுரர்களை அழிக்க நினைத்த முருகப் பெருமான் தனது திருக்கரத்தில் வில் ஏந்தி, அன்னை தந்த வேலேந்தி யுத்தகளம் கண்டார். அதில் சிங்கமுகன், தாரகாசுரன் (இவனை ஐப்பசி பஞ்சமி திதியில் வதம் செய்தார்) மற்றும் எல்லா சேனைகளையும் 5 நாட்களில் அழித்தார். ஆறாம் நாளான சஷ்டி அன்று சூரபத்மனை வதம் செய்தார் என்பது கந்த புராணம் எடுத்து உரைக்கும் செய்தியாகும்.

## பூரி ஜெகந்நாதர் ஆலய திருத்தேர் யாத்திரை

உலகப்புகழ் பெற்ற பூரி ஜெகந்நாதர் திருக்கோயில் நம் நாட்டின் கிழக்குக் கடற்கரையில் ஒரிசா மாநிலம், பூரி நகரத்தில் அமைந்துள்ளது. இது மிகப்பெரிய வைணவத் திருக்கோயில். இக்கோயில் ஒரு சிறிய குன்றின் மீது அமைந்துள்ளது. 22 படிகள் ஏறி எம்பெருமானை தரிசனம் செய்ய வேண்டும். இவ்வாலயத்தில் பல சிறிய சந்நிதிகளும் உள்ளன. இங்கு ஜெகந்நாதர், பாலபத்ரர், சுபத்திரை மூலமூர்த்திகளாகவும், அவர்களுடைய திருமேனி மரத்தினால் ஆனதாகவும் திகழ்கிறது. இக்கோயிலில் பலவிதமான பிரசாதங்கள் செய்தாலும் அவற்றினை மண்பாண்டத்தில்தான் எம்பெருமானுக்கு நிவேதனம் செய்வார்கள். இங்கு தேரோட்டத்திருவிழா ஆஷாட(ஆடி) மாதத்தில் ஒன்பது நாட்கள் நடைபெறுகின்ற ஓர் சிறப்பான நிகழ்வாகும். எம்பெருமான் ஸ்ரீகிருஷ்ணருக்கும், அவருடைய அண்ணன் பலராமருக்கும், தங்கை சுபத்திரைக்கும் தனித்தனியாக ஒவ்வொரு வருடமும் புதிதாக ரதம் தயாரித்து, அழகு வண்ணங்கள் பூசி எம்பெருமானை குண்டிசா ஆலயத்திற்கு அழைத்துச் செல்வர். ஆண்டு தோறும் புதிய திருத்தேர்கள் அமைத்து நடைபெறும் இத்தேரோட்ட விழாவினைக் காண பல இடங்களிலிருந்தும் பக்தர்கள் திரண்டு வருவார்கள். இவ்வாறு தேர்த்திருவிழா கொண்டாடும் உலகிற்கு நாயகனாக விளங்கும் ஜெகந்நாதரின் அருளைப் பெற்று நாமும் வளமாக வாழ்வோமாக.



*அலசுவோம்...*

*அறிவோம்...*

*ஆதிகாவிய நாயகர்களை...*




# இளமையை வேண்டிய யயாதி

**அகங்காரம், கோபம், பழியுணர்வு, பெரியோரை அவமதித்தல், சிற்றின்பம் ஆகியவற்றால் விளையும் தீமைகளை விளக்குவதுடன், மனப்பக்குவம், இறைபக்தி ஆகியவற்றின் மேன்மையையும் எடுத்துரைக்கும் கதாபாத்திரமே**

**யயாதி**

**– திரு.எஸ்.ஸ்ரீதுரை,**
**காஞ்சிபுரம், 9486139685**

பரீக்ஷித் மகாராஜாவின் முன்னோர்களில் ஒருவன் நகுஷன். அவனுக்கு யதி, யயாதி உட்பட ஆறு புதல்வர்கள் இருந்தனர்.

அவர்களில் முதலாவது புதல்வனாகிய யதி இவ்வுலக வாழ்க்கையின் நிலையாமையை உள்ளபடியே உணர்ந்து அரண்மனை வாசத்தை வெறுத்துத் தவம் புரிவதற்காகக் கானகம் சென்றான்.

இந்நிலையில் அரசனாகிய நகுஷன் பற்பல அஸ்வமேத யாகங்களைச் செய்ததன் பலனாக இந்திர பதவியை அடைந்தான். தேவலோகத்தின் தலைநகரமாகிய அமராவதிக்குச் சென்று தேவேந்திரனுடைய சிம்மாசனத்தில் அமர்ந்த நகுஷனுக்குத் தன்னுடைய புதல்வனைப் போன்ற மனப்பக்குவம் இல்லாததால், தேவேந்திரனுடைய மனைவியாகிய இந்திராணியை அடைவதற்கு விருப்பம் கொண்டான்.

தனது தகாத ஆசையினால் விளைந்த காமச் சிந்தனையுடன் தேவலோகத்து ரிஷிகளால் சுமந்து செல்லப்பட்ட ஒரு பல்லக்கில் ஏறிக் கொண்டு இந்திராணியின் அரண்மனை நோக்கிச் சென்றான். தனது காமத்தின் வேகத்திற்கு ஈடுகொடுக்க இயலாத ரிஷிகள் தனது பல்லக்கை மிகவும் மெதுவாகச் சுமந்து செல்வதாக நினைத்த நகுஷன், அந்த ரிஷிகளின் முதுகைத் தனது கால் கட்டை விரலால் தூண்டி, “ஸர்ப்ப, ஸர்ப்ப” (இன்னும் விரைவாகச் செல்லுங்கள்) என்று விரட்டினான்.

நகுஷனின் இந்தச் செயலால் மிகவும் கோபமுற்ற ரிஷிகள், “ஸர்ப்ப, ஸர்ப்ப என்று எங்களை விரட்டிய நீ ஒரு ஸர்ப்பமாக (பாம்பாக) மாறக்கடவாய்!” என்று சபித்தனர். அடுத்த நிமிடம் தனது இந்திர பதவியை இழந்த நகுஷன் ஒரு மலைப் பாம்பாக மாறிப் பாதாள உலகில் விழுந்தான்.

பூவுலகில் நகுஷன் அரசாண்ட ராஜ்ஜியத்திற்கு அவனுடைய இரண்டாவது மகன் யயாதி அரசன் ஆனான்.

இது இப்படியிருக்க, சுக்கிராச்சாரியாரின் மகள் தேவயானியை விருஷபர்வா என்ற அரசனின் மகள் சர்மிஷ்டை தனது கர்வத்தின் காரணமாக அவமானப்படுத்தி ஒரு கிணற்றில் தள்ளி விட்டாள்.

நகுஷனின் மகனாகிய யயாதி அவ்வழியே வேட்டையாட வந்தபொழுது, கிணற்றில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்த தேவயானியைக் கண்டு, அவளை அந்தக் கிணற்றிலிருந்து மீட்டு வெளியில் கொண்டு வந்தான். யயாதியிடம் தனது மனதைப் பறிகொடுத்த தேவயானி அவனுக்கு நன்றி சொல்ல தன்னுடைய தகப்பனார் சுக்கிராச் சாரியாரிடம் வந்து சேர்ந்தாள். விருஷபர்வாவின் மகள் சர்மிஷ்டையால் தான் பட்ட அவமானத்திற்குப்

# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*விருத்$_3$த$_4$மர்த்த$_2$ம் து கத$_3$ாசிது$_3$க்தம் ஸதே$_3$வ*
*ஸோம்யேத$_3$மிதி ச்ருதேச்ச।*
*அசிக்ஷயத்ஸங்க$_3$தமர்த்த$_2$முக்த்வா*
*ராமாநுஜார்யோஅத$_2$ தமத்யஜத்ஸ: ॥*

(31)

**"ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்" (சாந் 6–2–1) என்னும் உபநிஷத்வாக்யம் – ஸஜாதீய விஜாதீய ஸ்வகதபேத மற்ற சிந்மாத்ர வஸ்துவைச் சொல்லுகிறது என்னும் அவப் பொருளை ஒரு நாள் யாதவர் உரைத்தவுடன், அந்த வாக்யம் உலகிற்கு நிமித்த உபாதாந ஸஹகாரி காரணங்கள் மூன்றுமான ஸகல சேதநாசேதந ஸகல கல்யாண குண விசிஷ்ட ப்ரஹ்மத்தையே சொல்லுகிறது என்னும் பொருந்திய பொருளை அவருக்கு அறிவுறுத்தி இராமாநுஜர் யாதவரிடம் படிப்பதை அடியோடு கைவிட்டார்.**



– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

பழி தீர்க்க வேண்டுமென்ற தனது விருப்பத்தையும் வெளியிட்டாள்.

விஷயத்தைக் கேள்விப்பட்ட விருஷபர்வா தன்னுடைய குருவாகிய சுக்கிராச்சாரியாரின் சாபத்துக்கு பயந்து தன் மகள் சர்மிஷ்டை தேவயானியிடம் வேலைக்காரியாகப் பணிபுரிவதற்குச் சம்மதித்தான்.

பின்னர், தான் கிணற்றில் விழுந்த பொழுது கைகொடுத்துத் தூக்கிவிட்ட யயாதியை தேவயானி மணந்து கொண்டாள். தேவயானியுடன் நீண்ட காலம் இல்லற சுகத்தை அனுபவித்த யயாதி, அவளுக்குத் தெரியாமல் அவளுடைய வேலைக்காரியாகிய சர்மிஷ்டையிடம் தனது மனதைப் பறிகொடுத்து அவளிடமும் சுகங்களை அனுபவித்தான். இருவர் மூலமும் யயாதிக்கு ஐந்து புதல்வர்கள் பிறந்தனர்.




யயாதி சர்மிஷ்டையைக் காந்தர்வ விவாகம் செய்து கொண்ட விஷயத்தினைத் தாமதமாகவே அறிந்து கொண்ட தேவயானி, தன்னுடைய தகப்பனார் சுக்கிராச்சாரியாரிடம் முறையிட்டாள். மகள் மேல் கொண்ட பாசத்தால் தன்னிலை மறந்த சுக்கிராச்சாரியார் தன்னுடைய மருமகனாகிய யயாதியைப் பார்த்து, "என்னுடைய மகளுக்குத் துரோகம் இழைத்த நீ உன்னுடைய இளமையை இழந்து கிழப்பருவத்தை அடைவாயாக" என்று சாபம் கொடுத்து விட்டார்.

அதைக் கேட்டு மிகவும் அதிர்ந்து போன யயாதி உடனடியாகத் தன் மாமனார் சுக்கிராச்சாரியாரின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டதுடன், "நான் கிழப்பருவம் எய்தினால் அது தங்கள் மகள் தேவயானிக்கும் அல்லவா துன்பம் அளிக்கும்?" என்று வினவினான்.

யயாதியின் கேள்வியில் உள்ள நியாயத்தை உணர்ந்த சுக்கிராச்சாரியார், "எவன் ஒருவன் உன்னிடமிருந்து கிழப்பருவத்தைப் பெற்றுக்

கொண்டு, தன்னுடைய இளமையை உனக்குக் கொடுக்க விரும்புகின்றானோ, அவனிடம் நீ இளமையைப் பெற்றுக் கொண்டு சுகமாக வாழலாம்" என்று சாப விமோசனத்திற்கான வழியையும் கூறினார்.

தனக்கு இளமையைக் கொடுத்து விட்டுத் தன்னுடைய முதுமையை எடுத்துக் கொள்ளுபவர் யாராயினும் அவர்களைத் தன் ராஜ்ஜியத்தின் மன்னனாகப் பதவியில் அமர்த்தப் போவதாக யயாதி கூறியதைக் கேட்ட அவனுடைய முதல் நான்கு புதல்வர்களும் அதற்குச் சம்மதிக்கவில்லை.

ஆனால், ஐந்தாவது மகனாகிய புரு என்பவன் மட்டும் தன் தந்தையிடம் கொண்ட பாசத்தால் அதற்குச் சம்மதித்தான்.

அந்த க்ஷணமே யயாதி இளைஞனாக மாற, அவனுடைய மகன் புரு கிழவனாகி, அரச பதவியை ஏற்றான். அதன் பிறகு மேலும் பல நூற்றாண்டு காலம் இல்லற சுகத்தை அளவின்றி அனுபவித்த யயாதி ஒரு கட்டத்தில் அவ்விஷயத்தில் சலிப்புற்றான். எத்தனை காலம் சிற்றின்ப வேட்கையை அனுபவித்தாலும் ஒரு மனிதனின் மனம் முழுவதுமாகத் திருப்தி அடைந்து விடாது என்பதை மிகவும் தாமதமாக உணர்ந்து கொண்ட யயாதி தன் மகன் புருவிடம் வந்து, "அன்பு மகனே, இதோ உன் இளமையை நீயே எடுத்துக் கொள்! நான் எனது கிழப்பருவத்தைத் திரும்பவும் பெற்றுக் கொள்கின்றேன்" என்று கூறினான்.

மகன் புருவை இளைஞனாக்கி விட்டு, மீண்டும் கிழப்பருவம் எய்திய யயாதி வானப்பிரஸ்தம் ஏற்றுக் காட்டிற்குச் சென்று தவம் புரியத் தொடங்கினான்.

மகாபாரதத்தில் வருகின்ற இவ்விஷயமானது, அகங்காரம், கோபம், பழியுணர்வு, பெரியோரை அவமதித்தல், சிற்றின்பம் ஆகியவற்றால் விளையும் தீமைகளை விளக்குவதுடன், மனப்பக்குவம், இறைபக்தி ஆகியவற்றின் மேன்மையையும் மிகவும் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

*தொடர்ந்து அலசுவோம்...*

## வாழ்வியல் நெறிகள்

### வாழ்க்கையொரு பொம்மலாட்டம்



*நாட்டமென்றே யிரு! சற்குரு பாதத்தை நம்பு! பொம்ம*
*லாட்டம் என்றே இரு! பொல்லா உடலை அடர்ந்த சந்தைக்*
*கூட்டம் என்றே இரு! சுற்றத்தை வாழ்வைக் குடங்கவிழ்நீர்*
*ஓட்டம் என்றே இரு! நெஞ்சே உனக்கு உபதேசம் இதே!*

– பட்டினத்தார்

**பொருள் : மனமே! உண்மையைக் காட்டி, அஞ்ஞானத்தை அழிக்கும் குருவின் திருவடிகளைத் தேடத் தக்க பொருள் என்று இரு, அவற்றை உறுதியாக நம்பு! பொல்லாத தேகத்தைப் பொம்மலாட்டம் என்றே எண்ணியிரு! உறவுக் கூட்டங்களைச் சந்தைக் கூட்டம் என்றே இரு! இவ்வுலக வாழ்க்கையைக் குடம் சாய்ந்த நீரோட்டம் என்றே இரு! உனக்கு நான் செய்ய வேண்டிய உபதேசம் இதுவே!**

**வாழ்வியலுக்கான கருத்து : உடல், சுற்றம், வாழ்வு முதலியன நிலைத்தல் இல்லாதன என்பதும், அவை நமது அறிவு விளக்கத்திற்கு இறைவனால் கொடுக்கப் பெற்ற துணைக்கருவிகள் என்பதும், அவற்றையே உறுதிப் பொருள்களாகக் கொள்வது அறியாமை என்பதும் தெளிந்து, குருவின் உபதேசங்களை இடையறாது சிந்தித்திருப்பீர்!**

***-தொகுப்பு :முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை***



# பதஞ்சலியின் யோக சூத்திரங்கள்

- திரு.எம்.எஸ்.சுகுமார்,சென்னை, 8838252312.

சென்ற இதழின் தொடர்ச்சி...

**சூத்திரம் 27 :** *“தஸ்ய ஸப்ததா ப்ராந்தபூமி: பிரக்ஞா”*

விவேககியாதி ஏற்பட்டவுடன் இறுதிக்கட்ட சமாதி கிட்டுவதற்கு ஏழு விதமான அதீத அறிவு உண்டாகிறது. நிர்மலமான விவேக ஞானத்தால் சித்தத்தை மறைத்திருக்கும் அசுத்தங் களும், சஞ்சலம் தரும் விஷயங்களும் மறைந்து விடுகின்றன. உலகியல் விஷயங்களில் உள்ள சிக்கல்களும் மீண்டும் உதயமாகாமல் இருக்கும்.

**சூத்திரம் 28 :** *“யோகாங்கானுஷ் டானா தசுத்திக்ஷயே க்ஞான தீப்திரா விவேகக்யாதே:”*

அஷ்டாங்க யோகத்தை கடை பிடித்து விட்டால் சித்தத்தின் அசுத்தம் துடைக்கப்பட்டு நிர்மலமாகி விடும். அதன் பின் யோகிக்கு ஞான ஒளி பிறக்கும். அது விவேக கியாதி வரை கொண்டு போகும். நிர்மலமான சித்தத்தில் ஞானம் பிறந்தவுடன் ஆத்ம சொரூபமானது புத்தி, அஹங்காரம், புலன்கள் இவற்றிலிருந்து துல்லியமாக வேறுபட்டு தெரியும். அதுவே கியாதி ஆகும்.

**சூத்திரம் 29 :** *“யம நியமாஸன, ப்ராணாயாம, ப்ரத்யாஹார, தாரணா, த்யான ஸமாதயோ அஷ்டாவங்கானி”*

யமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாஹாரம், தாரணை, தியானம், சமாதி இந்த எட்டு அங்கங்களும் இதில் முக்கியமான இடம் பெறுகின்றன.

**சூத்திரம் 30 :** *“அஹிம்ஸா ஸத்யாஸ்தேய ப்ரஹமசர்யா பரிக்ரஹா: யமா:”*

1) அஹிம்சை – கொல்லாமை, பிறருக்கு தீங்கு நினைப்பது, வசை சொற்களால் மனத்தைப் புண்படுத்தாமல் இருப்பது. 2) சத்தியம் – கடைபிடிக்கும் சாதகனுக்கு மந்திர ஜபம் பலிக்கும், 3) அஸ்தேயம் – திருடாமை, பிறர் பொருளுக்கு ஆசைப்படாமல் இருத்தல், 4) பிரம்மசாரியம் – விரதம் அனுஷ்டிக்க வேண்டும், 5) அபரிக்ரஹம் – தேவைக்கு அதிகமாக ஏற்றுக்கொள்ளாமை இவையெல்லாம் யமங்கள் என்று யோகம் கூறுகிறது.

**சூத்திரம் 31 :** *“ஜாதிதேச காலஸமாயாவைச் சின்னா: ஸார்வபௌமா மஹாவ்ரதம்”*

இனம், தேசம், காலம், சூழ்நிலை இவற்றின் எல்லைக்குட்பட்டு இல்லாமல் மேற்சொன்ன அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம் எல்லாம் உறுதியாக கடைபிடிக்கும் போது அதை மகாவிரதம் என்று கூறுகிறார்கள்.

**சூத்திரம் 32 :** *“சௌசஸந்தோஷதப: ஸ்வாத்யாயேஷ்வர ப்ரணிதானானி நியமா:”*

1) சௌசம் – தூய்மை ஸ்னான வஸ்திராதிகளால் தேகத்தை சுத்தமாக வைத்துக் கொள்வது, 2) சந்தோஷம் – கடமைகளை சரிவர பணியாற்ற வேண்டும், 3) தவம் – லட்சியத்தை அடைவதற்கு எந்த கஷ்டத்தையும் சகித்துக் கொள்வது, 4) ஸ்வாத்யாயம் – அறநூல்களைப் படித்து அந்த உபதேசத்தின் பிரகாரம் வாழ முயற்சிப்பது, 5) ஈசுவர – இறைவனை சரண் அடைந்து சர்வார்ப்பணம் செய்து வாழ்வதே நியமங்களாகும்.

**சூத்திரம் 33 :** *"விதர்க பாதனே ப்ரதிபக்ஷ பாதனம்"*

பாவம் செய்தால் மேலும் மேலும் பாவம் செய்ய நிர்ப்பந்திக்கப்படுவோம் என்று தீமைகளுக்கு எதிரான சிந்தனை களை மனத்தில் கொண்டு உறுதியாக நல்ல எண்ணங்களை வளர்த்து நல்ல தையே செய்யவும்.

**சூத்திரம் 34 :** *"விதர்கா ஹிம்ஸாதய க்ருதகாரிதானு மோதித லோபக்ரோத மோஹ பூர்வக ம்ருமத்யாதி மாத்ரா துக்க க்ஞானாநந்த பலா இதி ப்ரதிபக்ஷ பாவனம்"*

மேற்சொன்ன யம நியமங்களுக்கு எதிரான இம்சை, அசத்தியம், திருடுவது, அபிரம்மசாரியம், பரிக்ரஹம் ஆகிய தீமைகள் அந்த அந்தச் சூழ்நிலைகளில் பேராசை, கோபம், பொறாமை, மதி மயக் கம் முதலிய காரணங்களால் வாழ்க்கை யில் நடக்க வாய்ப்பு இருக்கிறது. ஆனால் தீய எண்ணங்களுக்கு மனதில் இடம் கொடாமல் இருந்தால் பாவ காரியங்கள் நிகழாது. மன உறுதி இதற்கு அவசியம். யம நியமங்களுக்கு எதிரான தீமைகளை விதர்கா எனக் கூறியிருக்கிறார்கள். தீமைகள் செய்யும் போது இகலோகத்தில் வெற்றி அடைய முடியாது.

**சூத்திரம் 35 :** *"அஹிம்ஸா ப்ரதிஷ்டாயாம் தத்ஸன்னி வைரத்யாக:"*

அஹிம்சையை மகாவிரதமாக ஏற்றுக் கொண்டால் அந்த சுற்றுப்புற சூழல் முழுமையாக மாறிவிடும். அந்தப் பகையை முற்றிலும் ஒழித்து விட்டால் அந்த யோகி இருக்கும் சுற்றுப்புற இடமெங்கும் வேறு விதமாக மாறி விடும். அதன் தாக்கம் மற்ற பிராணிகளிடமும் பரவி அவை சாந்தமாகவே காணப்படும்.

**சூத்திரம் 36 :** *"ஸ்தய ப்ரதிஷ்டாயாம் க்ரியா பலாச்ரயத்வம்"*

வாழ்நாள் முழுவதும் சத்தியத்தை மகா விரதமாக ஏற்றுக் கொண்ட யோகியின் வாக்கு எது சொன்னாலும் அது அப்படியே நடக்கும். சாத்தியப்படாத விஷயமும் சாத்தியப்படும். காரியங்களின் பலன்களும் உடனே கூடும்.

**சூத்திரம் 37 :** *"அஸ்தேய ப்திஷ்டாயாம் ஸர்வரத்னோ பஸ்தானம்"*

திருடாமையை மகா விரதமாகக் கடைபிடிக்கும் போது யோகியின் ஞானக்கண்களுக்கு பொக்கிஷங்களும் புலப்படும். பூமிக்கு அடியில் உள்ள புதையல்களும் அவன் அறிவில் தென்படும். கடலுக்கு அடியில் மறைந்திருக்கும் பொருள்களும் அவன் அறிவின் பிரகடனமாகி விடும்.

**சூத்திரம் 38 :** *"ப்ரஹ்மசர்ய ப்ரதிஷ்டாயாம் வீர்யலாப"*

பிரம்மச்சரியத்தில் உறுதியாக இருந்து மகா விரதம் கடை பிடித்தால் அபூர்வ வலிமை பெற்றிருப்பார்கள். அவன் மனம், புத்தி, புலன்கள், தேகம் ஆகியவற்றில் வலிமை பெற்று பிறர் பிரமிக்கத்தக்க வகையில் வீர, தீர காரியங்களை செய்வான்.

**சூத்திரம் 39 :** *"அபரிக்ர ஹஸ்தனதர்யே ஜன்மகதந்தா ஸம்மோத"*

பொன், பொருள், பணம் ஆகியவற்றைச் சேமித்து வைக்காமல் உறுதியாக இருக்கும்போது மாக விரதமாகிறது. அத்தகைய யோகிக்கு பூர்வ ஜன்ம ஞாபகங்கள் வந்து விடுமாம். அதற்கும் முன் ஜன்மங்களைப் பற்றித் தெரிந்து கொள்வான்.

## வைணவ குறுக்கெழுத்துப்புதிர் 96க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பா | ண் | டு | ர | ங் | க | ன் | | | | | 2 க |
| ர் | தா | ந் | வ | ள | 3 ஆ | த | | | | | ஜே |
| த் | | ன் | | | | 4 நா | ம | க் | க | ல் | ந் |
| த | | 5 வ | ரா | க | ம் | க | ர | கா | க் | ரு | 6 தி |
| ன் | | த | | | | 7 ஜ | ன | க | ர் | | ர |
| 8 ப | ர | 9 மா | த் | மா | | | 10 அ | ச் | 11 சு | த | ன் |
| ள் | க | ங் | த | 12 வே | | | | | த | | த |
| | | | | ள் | | 13 ஆ | ழ் | வா | ர் | | ர |
| ர் | ள் | க | ல் | வி | 14 கோ | | | | மா | | வ |
| வு | | | | | 15 பா | க | வ | த | ம் | | தி |
| டு | | 16 தி | ரு | மா | ல் | | | | | | த் |
| 17 வ | ஜ் | ரா | யு | த | ம் | | | ல் | பி | ன் | 18 அ |

இந்த ஜன்மத்திலும் கடந்த கால நினைவுகள் துல்லியமாகத் தெரியும். இந்த பூர்வ ஜன்ம ஞானம் யோகத்திற்கு துணை புரியும் வைராக்கியத்தை அதிகப்படுத்துவதால் பற்றற்ற நிலைக்குள் ஆழ்ந்து போகலாம்.

**சூத்திரம் 40 : *"சௌசாத் ஸ்வாங்க ஜுகுஸ்பாரை ரஸம்ஸர்க:"***

எதிலும் தூய்மையை மனதில் கொண்டு நோக்கும் போது எதுவும் பிடிக்காமல் போகும். யோகியானவன் தேகம் நிலையில்லாதது; அசுத்தமானது; பிணத் திற்குச் சமமானது என்று தான் நினைப்பான். அகத் தூய்மை புறத்தூய்மை இல்லாதவர்களிடமிருந்து ஒதுங்கியே இருப்பான்.

**சூத்திரம் 41 : *"ஸத்வ சுத்தி ஸௌமனஸ்யை காகர்யேந்த்ரிய ஜயாத்ம தர்சன யோக்யத்வானி ச"***

அனைத்துயிர்கள் மீதும் நட்பு கொண்டு ஜபதபங்கள் மேற்கொள்ளும்போது பற்று, பகை, துவேஷம் முதலிய அழுக்குகளும் துடைக்கப்பட்டு சித்தம் நிர்மலமாகி விடும். கலக்கம் இன்றி மனம் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்கும். மனம் தெளிவு பெற்றவுடன் அது ஏகாக்ர நிலையை அடைந்து விடும்.

தொடரும்....

# தசாவதாரப் பெருமாள்!

*மீனோடு ஆமை கேழல் அரி குறளாய் முன்னும் இராமனாய்த்*
*தானாய் - பின்னும் இராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியும்*
*ஆனான் தன்னை-கண்ண புரத்து அடியன் கலியன் ஒலி செய்த*
*தேனார் இன்சொல் தமிழ்மாலை செப்பப் பாவம் நில்லாவே.*

– திருமங்கையாழ்வார்

## இமய உச்சிக்கு ஏறிய மச்சாவதாரம்

அவதாரங்கள் பத்தினுள்ளும் முதலாவதாகக் கருதப் பெறுவது மீன்–மச்சம் – இது நீர்வாழ் உயிரினம்.

ஆதி மனுவுக்கு, பிரளய (கடல் பொங்கிய) வெள்ளத்தில் காப்பளித்து உலக நலனுக்கு வேதங்களை மீட்டது கயல் அவதாரச் செயல்.

மீன் உருவில் வந்த இறைவனின் அருள் பணியை நன்றியுடன் நினைவு கூர்ந்து ஆதி மனுவின் வழி வந்த பாண்டியன், கடவுளின் அக்கயல் உருவைத் தன் அரசக் கொடியில் பொறித்துப் பறக்க விட்டான். பாண்டியத் தோன்றல்கள் பின் ஒரு காலத்தில் பாரதம் வென்று மீன் கொடியை இமய உச்சியில் ஏற்றி மகிழ்ந்தனர். இந்நிகழ்ச்சியை,

*"பருப்பதத்துக் கயல் பொறித்த பாண்டியர் குலபதிபோல்*
*திருப்பொலிந்த சேவடி என்*
*சென்னியின் மேல் பொறித்தாய்"*

எனப் போற்றினார் பெரியாழ்வார்.

*"வானோர் அளவும் முதுமுந்நீர் வளர்ந்த*
*காலம் வலியுருவில் மீனாய்*
*வந்து வியந்து*
*உய்யக்கொண்ட தண்*
*தாமரைக் கண்ணன்"*

எனத் திருமங்கையாழ்வார் தம் தசாவதாரப் பதிகத்தில், தான் கிடக்கும் கடலே பொங்கி எழுந்து உயிர்களை மாய்க்க முற்படும்போது கருணை கூர்ந்து, காத்தருளும் செயல்தான் கமலக்கண்ணன் மீனாய் வந்தது. பண்டைத் தமிழகத்தை, கடல் கோளிலிருந்து காத்தவன் மீன் உருவனாகிய திருமாலே என்பது இங்குக் குறிப்பால் அறியத்தக்கது. ஆகவேதான் தமிழர் கல்வி "அரிச் சுவடியில்" தொடங்குகிறது! தமிழ் மூதாட்டி "திருமாலுக்கு அடிமை செய்!" எனப் பணிக்கிறார்.



**நன்றி**
**பகவத் விஷய கட்டுரைகள்**
***(பாகம்-1)***

**இமய உச்சிக்கு ஏறிய மச்சாவதாரம்**

# உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம்

- டாக்டர் கே.கே. ஏ.ரங்கராஜன்,
திருப்பதி, 9985599669.

ஸ்ரீமந் நாராயணன் உகந்தருளின நிலங்கள் 108. இவற்றில் ஸ்ரீரங்கம், திருமலை, பெருமாள் கோயில் (காஞ்சீபுரம்) என்கின்ற திவ்விய தேசங்கள் முதன்மையாகக் கருதப்படுகிறது. கோயில் (ஸ்ரீரங்கம்), திருமலை என்கிற இவ்விரண்டு திவ்விய தேசங்களைப் பற்றியதே இந்த நூல். பதினொரு சுலோகங்களைக் கொண்டது. இந்நூல் திருவேங்கடமுடையானின் வாத்ஸல்யம் என்னும் உயர்ந்த குணத்தை, ஒளிவிடச் செய்கிறது. இதன் ஆசிரியர் மஹோபாத்யாய, மஹாவித்வான் ஸ்ரீமான் உ.வே. அநந்தாண் பிள்ளை புரிசை ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமி. இவர் பகவத் தர்ம தர்பணம், லக்ஷ்மீ கத்யம், ஸ்ரீநிவாஸ கத்யம், திருப்பாவை ஸம்ஸ்க்ருத நிவர்தநம், அநந்தார்ய மஹிம கதா ஸங்க்ரஹ: ஈசாவாஸ்யோபநிஷத் பாஷ்யம், வாதூல ப்ரவர தீபிகா குத்ருஷ்டித் வாத மார்த்தாண்டம், கார்ய வாதிகரண வாதம் முதலான 130க்கும் மேலான ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களை (நூல்) அருளிச் செய்துள்ளார்.



"வாத்ஸல்யாதி குணோஜ்ஜ்வலாம்" (வேங். ஸ்தோ.) என்பதற்கிணங்க "உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம்" என்று பெயரிட்டார். மேலும், திருவேங்கடமுடையானைக் குறித்துப் பாடப் பெற்றதால் ஸ்ரீஅநந்தாழ்வாரின் விருத்தாந்தமும் அடங்கியுள்ளது. இந்நூலுக்கு வடமொழியில் சிறப்பாக வியாக்கியானத்தை அமைத்தப் பெருந்தகை ஆசிரியரின் வழித்தோன்றலான ஸ்ரீமான் உ.வே. அநந்தாண்பிள்ளை புரிசை க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி ஆவார். இந்நூல் வடமொழியில் சக்ர வானத்தில் க்ஷுத்ரப்ரபந்தம் என்கிற அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. தமிழிலக்கியத்தில் முதலாழ்வார்களின் பாசுரங்களும், நம்மாழ்வாரின் திருவிருத்தம், பெரிய திருவந்தாதி, திருவாசிரியம், திருவாய்மொழி முதலிய திவ்வியப் பிரபந்தங்களும் இவ்வகையில் தோன்றியவையேயாகும்.

இந்த ஸ்தோத்ரத்தில் "உஜ்ஜ்வல" என்கிற அடைமொழியை (விசேஷணம்) மிகுந்த விருப்பத்தோடு ஆசிரியர் உபயோகித்ததாகத் தோன்றுகிறது. பகவானின் திருக்கல்யாண குணங்களில் வாத்ஸல்யம் மிகச் சிறந்தது. "விதித: ஸஹி தர்மஜ்ஞ: சரணாகத வத்ஸல:" (ஸ்ரீரா.ஸு॰ந்) என்றல்லவா சொல்லப்பட்டுள்ளது. "சரணாகத வத்ஸலத்வே விதித:" என்று பெரியோர் பகருவர். இந்த வாத்ஸல்ய குணம் அர்ச்சாமூர்த்தி எல்லாரிடத்தும் இருந்தாலும் திருவேங்கடவனின் பால் அதிகமாகக் காணலாம். "நிகரில் புகழாய்" என்று நம்மாழ்வாருடைய அருளிச் செயலாலே உணரப்படுகிறது என்பது ஆசார்யர்களின் நிர்வாஹம். இந்தப் பிரயோகத்தை நம்பிள்ளை, விவரித்துக் காட்டுகிறார். "நிகரில் புகழாய் என்ன வாத்ஸல்யத்தைக் காட்டுமோ? என்னில் இதுக்குப் பொருள் கத்யத்திலே அபார காருண்ய ஸௌசீல்ய வாத்ஸல்ய என்று குணங்களோடொக்க வகுத்து ஆச்ரித வாத்ஸல்யை

**திருப்பதி சுற்றுப்பகுதிகளில் உள்ள தி.தி.தே. ஆலய அமைவிடம் திருப்பதி ஆர்.டி.சி. பேருந்து நிலையத்திலிருந்து கி.மீ.களில்**

1) ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயம், திருச்சானூர்...05 கி.மீ.
2) ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், ஸ்ரீநிவாச மங்காபுரம்...12 கி.மீ.
3) ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயம், திருப்பதி...01 கி.மீ.
4) ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி ஆலயம், திருப்பதி...2.3 கி.மீ.
5) ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயம், திருப்பதி...03 கி.மீ.
6) ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், அப்ளாய குண்டா...18 கி.மீ.
7) ஸ்ரீவேதவல்லி சமேத ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி ஆலயம், நாகுலாபுரம்...65 கி.மீ.
8) ஸ்ரீபத்மாவதி சமேத ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், நாராயணவனம்...37 கி.மீ.
9) ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி ஆலயம், கார்வேடி நகரம்...48 கி.மீ.
10) ஸ்ரீகோதண்டராமாலயம், ஒண்டிமிட்டா, கடப்பா மாவட்டம்...116 கி.மீ.

ஜலதே – என்ற இக்குணத்தை விசேஷிக்கையாலே" என்று சொல்வது இதற்கு உதாரணம். ஆசார்ய ஹ்ருதயக்ரந்தத்தில் மூன்றாவது பிரகரணத்தில் (160) "மண்ணோர் விண்ணோர் வைப்பில் போகின்ற ஏழுலகுக்குயிர்ப்பாசம் வைத்த நிகரில் வாத்ஸல்ய முஜ்ஜ்வலம்" என்ற சூர்ணிகையில் "நிகரில் வாத்ஸல்யமுஜ்ஜ்வலம்" என்று பிரயோகித்தது இங்கு அநுஸந்தேயம். ஆகையால் பகவான் தன்னுடைய பக்தனிடமுள்ள அன்பு வெளிப்படுகிறபோது, பிரகாசமான குணங்களில் வாத்ஸல்ய குணம் முக்கியமாகிறது. இனி கவிதையின் நயத்தைப் பருகுவோம்.

*ரங்கே துங்கே கவேராசல*
*ஜகநகத்யந்த ரங்கே புஜங்கே*
*சேஷேசேஷே விசிந்வந்*
*ஜகதவநநயம் பாத்யயேஷே அபிதோஷே*
*நித்ராமுக்ராம் ததாநோகில*
*ஜநகுணத்யாந ஸாந்த்ராம தந்த்ராம்*
*சிந்தாம் யாம் தாம் வ்ருஷாத்ரௌ*
*விரசிய ஸி ரமாகாந்த காந்தாம் ஸுபாந்தாம்*

**பதவுரை**


ரமாகாந்த – ச்ரிய:பதி, துங்கே – உயரமான, கவேராசல ஜகநக + அந்தரங்கே = காவிரி மலையிலிருந்து பிறந்து, "ஹே மாபகர் என்ற பெயர் காவிரி நதியினுடைய நடுப்பகுதியில் உள்ளதான, ரங்கே – ஸ்ரீரங்கத்தில், புஜங்கே – பாம்பாகிய, சேஷே – ஆதி சேஷனிடத்தில் (இருப்பவனாகிய), பாதி – நன்றாக ஒளி விடுகின்ற, அசேஷ அபிதோஷே – (பக்தர்களின்) நிறைந்த, நித்ராமுத்ராம் – அறிவின்மையை, நிகில ஜநகுணத்யாந ஸாந்த்ராம் – எல்லா ஜநங்களுடைய குணத்தைக் குறித்து த்யானத்தின் கூட்டமானது. அதந்த்ராம் – எந்த வஞ்சானையும் இல்லாததான, யாம் – எந்த, சிந்தாம் (ச) – சிந்தனையை, ததந:= தரிப்பவனாய் (தாங்குபவனாய்), ஜகத வநநயம் – உலக ரக்ஷணக்யாஸத்தை, விசிந்வந் = தேடிக்கொண்டு, சேஷே – படுத்திருக்கிறாயோ, தாம் = அந்தச் சிந்தனையை, காந்தாம் = அழகியதான, சுபந்தாம் = மங்களத்தில் (எல்லை அற்றவனாகச் செய்கிறாய்).

தொடரும்....



மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்



சென்ற இதழின் தொடர்ச்சி...

பிரம்மரிஷியுடன் வந்திருந்த ரிஷி கனங்களைக் கண்ட ஸ்ரீஹரி கருணையோடு பார்த்து, “பிராம்மா! நீங்கள் என்ன காரணத்துக்காக இங்கே வந்தீர்கள் என்பதை விவரமாக எடுத்துக் கூறுங்கள் என்றார். பிரம்மா இரு கரங்களையும் கூப்பி வணங்கி தேவ தேவ! உலகைக் காப்பவனே! எங்கள் விண்ணப்பத்தைக் கருணையோடு கேட்கவும்.

விஸ்ரவ புத்திரனான இராவணன் கடும்தவம் செய்து சுர, யக்ஷ, கருட, கந்தர்வர்கள் போன்றவர்களும் தன்னை அழிக்க முடியாத வரத்தை கொடுக்கும்படி கேட்டுக் கொண்டான். நானும் சரி என்று அவனுக்கு அந்த வரத்தைக் கொடுத்து விட்டேன். தன்னைக் காத்துக் கொள்வதற்காகக் கொடுக்கப்பட்ட வரத்தை இராவணன் தவறாகப் பயன்படுத்தத் தொடங்கினான். அவன் கர்வம் கொண்டவனாக மாறி தனக்கு நிகரானவர்கள் யாரும் இல்லை என்று நினைத்து அகங்காரம் கொண்டு நடந்து கொள்கிறான். ஸ்ரீசைலம் பகுதியில் உள்ள சாதுக்களைத் துன்புறுத்தத் துணிந்துள்ளான்.

ஸ்வாமி! இராவணன் தேவ கணங்களால் தனக்கு எந்தவொரு தீங்கும் ஏற்படக்கூடாது என்று வரம் பெற்றாரே தவிர, மனிதர்கள் தன்னை யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்ற தைரியத்தில் அவன் மனிதர்கள் மூலமாக தனக்கு எந்தவொரு தீங்கும் வரக் கூடாது என்று கேட்கவில்லை. மிகவும் அகங்காரம் கொண்டு திரியும் இராவணன் முடிவு காலத்தில் சாதாரண மனிதன் மூலமாகவே அவன் கொல்லப்படுவான் என்று நான் அன்று நினைத்தேன்.

பிரம்மா சொல்லியதைக் கேட்ட ஹரி, பிறகு அகஸ்தியர் முதலானவர்களைப் பார்த்து, முனிவர்களே நீங்கள் அனைவரும் இங்கே வந்த காரணம் என்ன? என்று கேட்டார்.

அகஸ்தியர் தாமரைக் கண்ணாளனைப் போற்றித் துதித்தார். பின்னர் பத்து சிரம் உடையவனும், பரம மூர்கனுமான இராவணன் உலக மக்களை பல வகையில் துன்புறுத்தி வருகின்றான். பூலோகத்தில் மக்கள் படும் இன்னல்களைக் காண முடியாமல் நான்முகனை அழைத்துக் கொண்டு தங்களிடம் வந்தோம். ஸ்வாமி! அந்த இராவணனை அழித்து உலக மக்களைக் காப்பாற்றுங்கள். உலக நன்மையை விரும்பும் எங்களை தங்கள் கருணைப் பார்வைக் கொண்டு காக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர்.

அதைக் கண்டு ஹரி புன்னகைத்தபடி சனக சனந்த முனிவர்களை நோக்கி நீங்கள் வந்த காரணம் என்ன என்று வினவினார்.

ஸ்வாமி! எப்பொழுதும் மனக் கண்களால் தரிசித்துக் கொண்டிருக்கும் தங்களின் அழகிய திருவுருவத்தை சாதா ரண கண்களைக் கொண்டு எவ்வாறு தரிசிக்கின்றார் என்பதை காண்பதற்கு வந்தோம் என்றனர்.

மேலும், தேவேந்திரனைப் பார்த்து நீ வந்த காரணம் என்ன? என வினவினார்.

சொர்காதிபதியான தேவேந்திரன் "நிர்மலாத்மா! மாதவா! பிரம்மா, அகஸ் தியர் முதலான முனிவர்கள் கூறியபடி இராவணன் தன் விருப்பப்படி அலைந்து திரிந்து தனக்கு எவரும் நிகரில்லை என்று எண்ணி ஸ்ரீசைலத்தில் அதைச் சுற்றி உள்ள பகுதிகளில் உள்ள முனிவர்களை யும், மனிதர்களையும் பலவகையில் துன் புறுத்தி வருகிறான். அந்த அரக்கனை அழிப்பவர் யார்? என்று எங்களுக்குத் தெரியவில்லை.

தேவா! அவனை அழிப்பதற்கு தாங்களே சரியானவர். இதுவரையில் எத்தனையோ துன்பங்கள் பட்டோம். தாங்கள் அந்த அரக்கனின் அட்டூழியங் களுக்கு முட்டுக்கட்டை போட வேண்டும். பூலோகவாசிகளைக் காக்க வேண்டும். எனவே நல்லதொரு முடிவை உடனே எடுக்க வேண்டும். எங்களைப் போன்ற வர்கள் மீது கருணைக் காட்டுங்கள்.

தங்களுடைய சக்தியை நாங்கள் நன்கு அறிவோம். தாங்கள் ஒருவரே இராவணனை வதம் செய்யும் சக்தி படைத்தவர். எங்கள் குறைகளை தங் களிடத்தில் சொல்லிக் கொள்வதற்கு தங்களைத் தேடி பலவிடங்களில் அலைந்து திரிந்தோம். இறுதியில் நாங்கள் செய்து கொண்ட புண்ணியத் தின் பலனாக இங்கே உங்களுடைய தரிசன பாக்கியத்தைப் பெற்றோம். ஸ்வாமி! இராவணனை எப்படியாவது வதம் செய்ய வேண்டும் என்று மிகவும் தாழ்ந்த குரலில் வேண்டிக் கொண்டான்.

ஸ்வாமி! திவ்ய தேசங்களான பாற்கடல், ஸ்ரீவைகுண்டம் விடுத்து சேஷபர்வதமான இம்மலையில் தாங்கள் இருப்பதற்கான காரணம் என்னவோ எங்களுக்குத் தெரியவில்லை. அதுமட்டும் அல்லாமல் சாதாரண மக்களுக்குக் கூட தெரியாமல் இந்த மலையில் திரிந்து கொண்டிருப்பது என்ன? பூலோக வாசியான இராவணன் ஆணவத்தோடு இருப்பதென்ன? ஸ்வாமி எங்களை மன்னிக்கவும். தீமையை அழித்து நன்மையைக் காப்பவன் என்ற பெருமையுடைய தாங்களே அதை மறந்து போவது என்ன?

ஸ்ரீஹரியும் இராவணனை அழிக்க வேண்டும் என்று பிரார்த் தித்திருப்பவர்களை நோக்கி, "பிரம்மா முதலானவர்களே! நீங்கள் அதைரியம் கொள்ள வேண்டாம். உங்கள் அனைவரின் நலனை யும் காப்பது என் கடமையாகும். நான் உங்களை நிச்சயம் காப் பேன். அந்தத் தீய அரக்கனின் முடிவுக் காலத்தை எண்ணியே நான் காத்துக் கொண்டிருக்கிறேன். கடலைத் தாண்டி இம்மலையில், இக்காட்டுப்பகுதியில் அவன் கால் வைத்தவுடனே பத்துத் தலையை உடைய இராவணனின் அழிவுக்குத் திட்டம் தீட்டப்படும் என்று உறுதி கொடுக்க, அப்பொழுது அங்கே கைலாசவாசன் வந்தார். ஸ்வாமி! வைகுண்டத்தை விட்டு விட்டு, சேஷா சலத்தையே தாங்கள் வாழும் இடமாக்கிக் கொண்டீர்கள். இருப்பினும் பூலோகவாசிகள் இன்னும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதானா?

சாதாரண மக்களுக்கு அரக்கர்களின் தொல்லை இல்லாமல் இருப்பதற்காக தாங்கள் சேஷாத்திரியில் வந்திருப்பது நல்லதே. தாங்கள் இருக்க அரக்கர்கள் இத்திசையிலே தலைக்காட்ட மாட்டார்கள். இக்காரணத்தால் இந்த இடம் பூலோக வைகுண்டம் என்ற பெருமைக்குரியதாகத் திகழும். எனவே, உம்மை விட்டு நீங்காமல் உம் அருகிலேயே நானும் இருப்பேன். நானும் பூலோக வாசனாக விளங்குவேன். எனக்குத் தகுந்த இடத்தை தாங்களே முடிவு செய்யக்கூடாதா. இருவரும் பூலோக வாசிகளாக இருப் போமா என்றார்.

அவர் விண்ணப்பத்திற்கு பதில் கூறிய ஹரி, "பரமேஸ்வரா! தாங்கள் என்னுடன் இருக்க வேண்டும் என்ற எண்ணம் நல்லதே! எனக்கும் அதில் விருப்பமே! ஆகையால் இந்த மலைக்குக் கீழ் பாகத்தில் தாங்கள் இருப்பீர்களாக என்றார்.

இந்த உரையாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்த தேவாதி களும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். வாசுதேவர் தசரதனின் பக்கம் தன் பார்வையைத் திருப்பி தவசிகளே தாங்களும் இங்கு தொடர்ந்து வருவதற்குக் காரணம் என்ன? என்று வினவினார்.

தசரதன் தன் இரு கரங்களையும் கூப்பி, ஆனந்த மய மானவனே! உலக நாதனே! விஸ்வாத்மா! உம்மை தரிசனம்

செய்ய வேண்டும் என்னும் ஆசையோடு வந்தேன். ஸ்வாமி! பிரம்மா முதலாக யாரெல்லாம் உம் தரிசனத்திற்காக தவம் செய்கிறார்களோ, அவரவர் களுக்கு விருப்பமான முறையில் உம்மைப் போற்றி வணங்குகிறார்களோ அவர்களுக்கெல்லாம் நீயே குருவாவாய்.

இவ்வுலகினைப் படைத்தவனும் நீயே. உன் கட்டளைக்கு கட்டுப்பட்டு அனைத்தும் இயங்குகிறது. அனைத்தும் நீயே ஆவாய். நீ வாசம் செய்கின்ற இடமே பரமபதம். உன் பெருமை எல்லாம் எடுத்துக் கூறும் சக்தி எனக்கில்லை. ஸ்வாமி! தேவாதி தேவா! எளியோனாகிய என் விண்ணப்பத்தைக் கேட்பாயாக. தாங்கள் பிரசாதித்த போக பாக்கியங்கள் எல்லாம் என்னிடத்தில் உள்ளது. ஆனால், வம்ச கௌரவத்தைக் காத்து நிலைபெறச் செய்வதற்கு ஒரு பிள்ளை எனக்கு இல்லை. இது எனக்குத் தீராத கவலையாகி விட்டது. எனவே, பிள்ளைப்பேறு வேண்டியே நான் உம் திருவடியைச் சரணம் என வந்தேன். ஸ்வாமி! என் மீது கருணைக் கொண்டு சத்தியம், தர்மம், பராக்ரமம் மற்றும் எல்லா வல்லமையும் கொண்ட மகனை எனக்குப் பிரசாதிக்க வேண்டும் என வேண்டிக் கொண்டார்.

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

*பெருமை அறிவோம்...*

## ஸ்ரீவேங்கடேஸ்வரா பக்திச் சேனல்

தி.தி.தே.

ஸ்ரீவேங்கடேஸ்வரா பக்தி சேனலானது திருமலையின் ஏழு மலைகளின் அரசனான திருவேங்கடவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு முக்கிய ஆன்மீகச் சேனலாகும். முதன் முதலில் எஸ்.வி.பி.சி. சேனலானது தெலுங்கு மொழியில் முதன்மையாக ஒளிபரப்பப்பட்டு வந்தது. அதன் பின்னர் அண்டை மாநில மொழிகளான தமிழ், கன்னடம் மட்டுமல்லாமல் இந்தியிலும் சேனல்கள் ஏற்படுத்தப்பட்டு அந்தந்த மொழிகளிலேயே ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.







உலகம் முழுவதிலிருந்தும் பக்தர்கள் பலர் திருமலைக்கு தங்களால் செல்ல இயலவில்லையே எனும் மனக்குறை இல்லாமல் திருமலையப்ப ஸ்வாமியே தமது இல்லத்திற்கு வந்து அருள் புரியும் விதத்தில் திருமலையில் நடக்கும் நிகழ்ச்சிகளை நேரலையாக காணும் வாய்ப்பினை தி.தி.தே.வின் எஸ்.வி.பி.சி. சேனல் நமக்கு அளிக்கிறது.

இந்தச் சேனலில் நேரலை ஒளிபரப்பு மட்டுமின்றி சனாதன கலாச்சாரத்தின் ஒரு அங்கமான இசை, நடனம், நாட்டியம், நாடகம், சமயக் கருப்பொருள்கள் அடங்கிய தொடர்கள், நமது திருத்தலம் என்ற வரிசையில் இதர ஆலயங்களின் விவரங்கள் போன்ற வற்றோடு, திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயம், திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயம் மற்றும் தி.தி.தே. ஆலயங்களில் நடைபெறும் சிறப்பு நிகழ்வுகளையும் நேரலையாகவோ, தொகுப்பு நிகழ்ச்சிகளாகவோ காட்சியமைத்து ஒளிபரப்பி வருகின்றது.



## திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்
## 16-07-2024 முதல் 18-07-2024 வரை

| | | |
|---|---|---|
| 16-07-2024 | செவ்வாய் | ஜ்யேஷ்டாபிஷேகம் ஆரம்பம் |
| 17-07-2024 | புதன் | கவச பிரதிஷ்டை |
| 18-07-2024 | வியாழன் | கவச சமர்ப்பணம் |

# ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி சாக்ஷாத்கார வைபவம்



திருவேங்கடமுடையான் கலியுக வைகுந்தமான திருமலையில் மட்டுமின்றி திருமலை அடிவாரத்திலும் கொலு வீற்றிருந்து தன்னைச் சரணடைந்த பக்தர்களுக்கு அருள் புரிந்து வருகிறார். இப்பகுதியை ஸ்ரீநிவாச மங்காபுரம் என்று அழைப்பர். திருவேங்கடமுடையானின் திருவடிவமே ஸ்ரீநிவாச மங்காபுரத்தில் கொலுவீற்று இருக்கும் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆவார்.

திருப்பதிக்கு மேற்கே சுமார் 10 கி.மீ. தூரத்தில் கொலு வீற்றிருக்கும் இந்த ஸ்ரீநிவாசனின் அர்ச்சா மூர்த்தி சந்திர கிரிக்கு அருகில் ஸ்வர்ணமுகி நதிக்கரையில் அமைந்து உள்ளது. திருவேங்கடமுடையான் பத்மாவதி தாயாருடன் தான் தங்கியிருந்த வராக க்ஷேத்திரமான திருமலைக்கு நடந்து சென்ற “ஸ்ரீவாரி மெட்டு” எனும் நடைபாதை வழி இவ்வாலயத்திற்கு வெகு அருகிலேயே அமைந்துள்ளது. மிகப் பழமையான இப்பாதை சந்தரகிரி வழியாக வரும் பக்தர்களுக்கு மிகப் பயனுள்ளதாக அமைகின்றது. திருமலை யாத்திரையின்போது ஸ்ரீநிவாச மங்காபுரத்தில் கொலுவீற்றிருக்கும் ஸ்ரீநிவாசரை வணங்கி, பின்னர் ஸ்ரீவாரி மெட்டு வழியாக திருமலையை அடைகின்றனர்.

தொடர் ஆண்டு 1900ல் வெர்ரி பாகுளம்மா என்கிற சுமார் 52 வயது உடைய ஒரு பெண்மணி ஸ்ரீநிவாச மங்காபுரத்தில், சிதிலமடைந்திருந்த ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயிலுக்கு எங்கிருந்தோ வந்து இந்த ஆலயத்தைத் தூய்மைப்படுத்தி ஆலய வளா கத்திலேயே தங்கி, அங்குள்ள கிராமவாசிகளிடம் பிர சாதத்திற்கு தேவையானவற்றை யாசித்து, எம்பெருமா னுக்கு நிவேதனம் செய்து, அங்கேயே வசித்து வந்தார்.

கிராமவாசிகளும் அப்பெண்மணியை “தாயாரம்மா” என்று அழைத்தனர். நீண்ட காலம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு சேவை புரிந்து வந்த “தாயாரம்மா” ஒரு நாள் திடீரென ஊரிலுள்ளவர்களை அழைத்தார். அவ்வூர் மக்களி டம் “இனி தன்னை இந்த ஊரில் காண முடியாது என்றும், கோயிலை நிர்வகிக்க ஒரு பிராம்மணர் வருவார்” என்றும் கூறி விட்டுச் சென்றார். அடுத்த நாளே காஞ்சிபுரத்தில் இருந்து சுந்தரராஜ சுவாமி என்பவர் ஸ்ரீநிவாசமங்காபுரத்திற்கு வந்தார்.

இவ்வூர் மக்களிடத்து தன் கனவில் இப்பெருமான் தோன்றி, தான் முட்புதருக்கு நடுவே இருப்பதாகவும், தனக்கு முறைப்படி பூஜைகள் செய்யுமாறு அருள் வாக்கு சொன்னதைத் தெரிவிக்கவே தான் இங்கு வந்ததாகக் கூறினார். ஸ்வாமியைத் தேடிக்கொண்டு வரும் பொழுது நேற்றிரவு ஸ்வாமி கனவில் தோன்றி, "நான் இங்கு தான் வீற்றிருக் கிறேன்" எனத் தெரிவித்ததாக அவர் கூறினார். அடுத்த நாளே கிராம மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஆலயத்தில் முட்புதர்களை அகற்றி, பசுஞ்சானத்தால் ஆலயத்தையும் தூய்மைப்படுத்தினர்.



தொடர் ஆண்டு 1940ல் விக்ரம ஆண்டு ஆடி மாதம், சுக்ல பக்ஷ சப்தமி, உத்திர நட்சத்திர நாளில் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு சாக்ஷாத்கார வைபவம் ஆகமப்படி பூஜைகள் துவங்கியன. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக யோக நித்திரையில் ஆழ்ந்த ஸ்வாமியை சுப்ரபாதம் பாடி துயில் எழுப்பினர். புருஷ ஸூக்தம், ஸ்ரீ, பூ ஸூக்தம் போன்றவற்றை ஓதி, அபிஷேக ஆரதனைகள் செய்யப்பட்டன.



11-7-1940லிருந்து ஒவ்வொரு வருடமும், இன்று வரை அந்த நன்னாளில் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு சாக்ஷாத்கார வைபவ உத்ஸவம் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் பின்பு 1967ல் திருமலை திருப்பதி தேவஸ்தானம் இந்த ஆலயத்தைத் தங்கள் பொறுப் பில் ஏற்றுக் கொண்டது. 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் இவ் வுற்சவம் அதே நாளில் 3 நாட்கள் ஸ்ரீவைகானச ஆகமப்படி "சாக்ஷாத் கார வைபவ உத்ஸவ"மாக மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது.

இங்கு ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம் ஏற்படுவதற்கு காரணமும் உண்டு. நாராயணவனத்தில் பத்மாவதி தேவியைத் திருமணம் செய்து கொண்ட ஸ்ரீநிவாசர், திருமலைக்குச் செல்லும் வழியில் தொண்டவாடா வில் இருந்த அகத்திய முனி ஆசிரத்திற்குச் சென்றார். அங்கு தம்பதியர் இருவரும் அகத்தியரை தரிசித்தனர். பத்மாவதி ஸ்ரீநிவாசரை ஆசீர்வதி த்த முனிவர், புதுமணத் தம்பதிகள் ஆறு மாத காலம் மலை அடிவாரத் திலே நிவாசம் செய்யும்படி அறிவுறுத்தினார். முனிவரின் வாக்கினை ஏற்று பத்மாவதியும் ஸ்ரீநிவாசரும் இந்த மங்காபுரத்தில் நிவாசம் செய் தனர். ஸ்வாமி திருமலைக்குச் செல்லும்போது தன் பக்தர்களுக்காக இரண்டு வரங்களை அளித்து சென்றதாகப் புராணம் கூறுகின்றது.



திருமலையில் என்னை தரிசிக்க இயலாத பக்தர்களுக்காக இங்கும் அர்ச்சை வடிவில் தரிசனமளிப்பேன் மற்றும் பத்மாவதியுடன் திருமணம் முடிந்தவுடனே முதன் முதலில் இங்குதான் வந்தேன். ஆகவே யாருக் கெல்லாம் திருமணத்தடை ஏற்படுகிறதோ அவர்கள் இங்கு வந்து பிரார்த்தனை செய்தால், உடனே திருமணம் கைக்கூடும் என்றும் அருள் புரிந்து திருமலைக்குச் சென்றாராம்.

- திரு.ஜெ. பாலசுப்ரமணியம், திருப்பதி





1997 ஆம் வருட இந்திய ஆட்சிப் பணி பேட்ச்சைச் சேர்ந்த திரு. ஜெ. சியாமல ராவ் ஐ.ஏ.எஸ். அவர்கள் ஆந்திர மாநில அரசின் பல்வேறு துறைகளில் தம் சேவையைச் சிறப்புற ஆற்றி தற்பொழுது ஆந்திர மாநில மேல்நிலை கல்வித் துறையில் முதன்மைச் செயலாளராக பணியாற்றி வந்த இவரை ஆந்திர மாநில அரசு திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் புதிய செயலாட்சித் தலைவராக நியமித்து, ஆணை பிறப்பித்தது.





16-06-2024 அன்று திருமலையில் திரு. ஜெ. சியாமல ராவ் ஐ.ஏ.எஸ். அவர்கள் குடும்ப சமேதமாக திருவேங்கடமுடையானை தரிசனம் செய்து, பின்னர் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் புதிய செயலாட்சித் தலைவராக திருவேங்கடவனின் திருச்சன்னதியில் பதவிப்பொறுப்பினை ஏற்றார். அவருக்கு ஸ்வாமி தீர்த்தப் பிரசாதங் களும், சித்திரப்படமும் வழங்கப்பட்டன.



புதிதாக பதவிப் பொறுப்பினை ஏற்ற மறுகணமே தி.தி.தே. செயலாட்சித்தலைவர் அவர்கள் ஸ்வாமி தரிசனத்திற்கான "க்யூ" வரிசையினை தணிக்கைச் செய்தும், பக்தர்களுடன் உரையாடியும், அவர்களின் அறிவுரைகளைக் கேட்டறிந்தார். பின்னர் ஸ்ரீவெங்கமாம்பா அன்னப்பிரசாத கட்டடத்திற்குச் சென்று அங்கு உள்ள சமையல் கூடத்தைத் தணிக்கைச் செய்து பின்னர் பக்தர் களோடு அன்னப்பிரசாதத்தினையும் உட்கொண்டார்.



தி.தி.தே. செயலாட்சித் தலைவர் மற்றும் தி.தி.தே. ஸப்தகிரி மாத இதழின் சிறப்பு ஆசிரியர் என்கின்ற முறையில் திரு.ஜெ. சியாமல ராவ் ஐ.ஏ.எஸ். அவர்களை ஸப்தகிரி மாத இதழ் மனப்பூர்வமாக வரவேற்கிறது.







# குருவருள் திருவருள் நல்கும்

– முனைவர் ந. மைதிலி, சென்னை,
9884347886

### குரு

அஞ்ஞானத்தை அகற்றி ஞானம் அளிப்பவரே குரு. தலைமை, சிறப்பு, மேன்மை, ஒளி முதலான பொருள்களைத் தரவல்லது. தலைமைச் சிறப்புடைய மேன்மை, ஒளிமிக்க, ஞானம் மிகுந்த ஒருவரின் திருப்பாதமாகிய திருவடிகளே உய்ய வழிகாட்டும்.

*''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகத்
தொடங்கினார்க்கு ஓர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்குமே
பராபரமே''*

எப்படி ஒரு திருக்கோயிலுக்கு மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலான மூன்றும் சரியாக வாய்க்கப் பெற்று உயர் சாந்நித்யம் அடைய, ஆங்கு உறையும் இறையைக் கண்ணாரக் கண்டால் எப்படிப்பட்ட பேறு அடைவார்களோ அதுபோல் எல்லாத் தகுதியும் உற்ற சற்குரு வாய்க்கப் பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது என்கிறார் தாயுமானஸ்வாமிகள். ஆக, ஞானத்தை அளிக்க வல்லவர் குரு என்பது தெளிவு. தான் அறிந்ததைப் போதிக்காமல் தன் மாணவனுக்கு எது தேவை என்பதை உணர்ந்து போதிப்பவரே குரு.

### தந்தை

குருவை அடையாளம் காட்டுபவர் தந்தை. இதனைப் பொன் முடியார் என்ற புலவர் "புறந்தந்த தாய் தன் மகனுக்குத் தந்தையை அடையாளம் காட்ட, அத்தந்தை அவனைச் சான்றோனாக்க வழி வகுக்கிறான். அச்செயலைத் தன் கடமையாக ஏற்று நடத்துகிறான்'' என்றார். *''சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே''* (புறநானூறு). இப்படித் தன் கடமையைச் சீர்மையாகச் செய்த பல்லோருள் உலகிற்கு ஓர் நல்மகனை, சான்றோனை, நற்குருவை அளித்த ஒரு வள்ளல் உண்டு. அவ்வள்ளல் யார்? அவரின் மகன்...

### வியாசர் அவதாரம்

மஹாவிஷ்ணுவின் அம்சமாகத் தோன்றிய கிருஷ்ண த்வைபாயனர் என்ற இயற்பெயர் கொண்டவர் வியாசர். இவரே ஆதிகுரு. பராசர முனிவருக்கும் சத்யவதிக்கும் பிறந்த உத்தம புத்திரர். இவரை சிறப்பிக்கும் விதமாக வியாச பூர்ணிமா (ஆடி மாதத்தில் வரும் பௌர்ணமி), புத்த பூர்ணிமா, குருபூர்ணிமா என்று பலபெயர்களில் ஒரு பெரிய பண்டிகையாக இந்துக்களால் கொண்டாடப் படுகிறது. வியாச மஹாமுனியே வேதங்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்தார். மகாபாரதப் போரின் போது கிருஷ்ண பரமாத்மா அருளிய பகவத் கீதையைத் தொகுத்தார். வேதங்களின் சாரமான பிரம்ம சூத்திரம் எழுதினார். இந்த மூன்றையும் சேர்த்து சமஸ்கிருதத்தில் பிரஸ்தான த்ரயம் என்பர். இவை தவிர பதினெட்டு புராணங்களும் எழுதி உள்ளார்.

வியாசருக்கு முன் ரிஷிகள் மூலமாக வாய் மொழி வழியாக வேதங்கள் அப்யாசம் செய்யப்பட்டு வந்தன. அவற்றைத் தொகுத்து வழங்கியவரே வியாசர். இதனால் வேதவியாசர் என்று போற்றப் படுகிறார். இப்படியாக வகுக்கப்பட்ட வேதங்கள் வைசம்பாயனர், சுமந்து முதலான நால்வருக்குக் கற்பிக்கப்பட்டது. பாகவதம் சுக மகரிஷிக்குப்

## தொழத்தகுந்தோர் அனைவருமே குரு



- சனத்குமாரர்களுக்கு உபதேசம் அளித்த தக்ஷிணாமூர்த்தி.
- தகப்பனுக்கே உபதேசம் அருளிய தகப்பன் ஸ்வாமியான முருகப் பெருமான்.
- சைவ வைணவ சமயம் தழைக்க வந்த ஆதி சங்கரர், இராமாநுஜர், மத்துவர் என்ற வரிசையில் பலர்.

இறைவன் அவதாரம் எடுத்தபோதும் குருவின் மகிமையை உலகம் அறிய வேண்டி ஆசிரியர்களிடம் கல்வி பயின்றுள்ளதை புராணங்கள் கூறுகின்றன. இராமபிரான் வசிஷ்ட முனியிடம் கல்வி பயின்றார். அதே போல் கண்ணபிரான் சாந்தீபனியிடம் அறுபத்து நான்கு கலைகளைக் கற்றுணர்ந்ததாக வரலாறு உண்டு. இவற்றை எல்லாம் நோக்க ஒருண்மை புலப்படும்.

போதிக்கப்பட்டது. பின்னர் பரீக்ஷித் மகாராஜாவுடன் சௌனகர் முதலான பலருக்கும் சுக மகரிஷியால் பாகவதம் சொல்லப்பட்டது. இவ்வாறு குரு பரம்பரை தோன்ற வியாசர் காரணமாக இருந்ததாலும் ஒன்றல்ல இரண்டல்ல பல்லாயிரம் சுலோகங்கள் அடங்கிய ஒவ்வொரு நூலும் கற்பிக்கப்பட்ட காரணகர்த்தா என்பதாலும் குரு பூர்ணிமா என்ற நிகழ்வு வியாச முனிவரை மையமாக வைத்துச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

### குரு கடாக்ஷம்

குரு கடாக்ஷம் அனைத்துச் செல்வங்களையும் அருளும். துரோணரிடம் பயில வந்து இயலாமல்



போக அவரின் திருவுருவத்தைச் செய்து, வழிபட்டு வில்வித்தை வீரனாகினான் ஏகலைவன். குருவின் பார்வை இன்றி குருபக்தி அவனை உயர்த்துகிறது. பிறகு ஆசாரியர் துரோணர் அர்ஜுனனின் மனமது அறிந்து ஏகலைவனின் கட்டை விரலைக் குரு தட்சணையாகக் கேட்க, அதையும் கொடுத்துத் தன் குரு பக்தியை நிலைநாட்டுகிறான் ஏகலைவன். வலது கை விரல் போனால் என்ன இடது கைவிரல் இருக்கிறதே என்று மகிழ்ந்து அதே குரு உருவ பொம்மையை வழிபட்டு தேர்ச்சி உறுகிறான். இந்த இடத்தில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். குருவாகிய துரோணர் சீடன் ஏகலைவன் திறமையை அறிந்ததால், அதை நிரூபிக்க வேண்டியே விரலைத் தானமாகக் கேட்கிறார்.

துரோணரின் அருட் கடாக்ஷம் ஏகலைவனுக்கு இருந்ததால் இடது கையாலும் வில் எறிந்து வெற்றி பெறும் அளவிற்கு வில்வித்தை வீரனாக ஆக முடிந்தது. இந்த உண்மையை அந்த இருவர் மட்டுமே அறிவர். தெரிந்த புராணத்தில் தெரியாத நிகழ்வு இதுவாகும். ஆக, குருவருளே திருவருள் என்பதில் சந்தேகம் இல்லை. பாரதியாரும், *"குரு சரணம் நினைவாய் நெஞ்சே"* என்றார். ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் வாழும் சமுதாயம் மலர வேண்டுமெனில் அது அறியாமை இருளைப் போக்கும் திறமை மிக்க ஆசிரியப் பெருமக்கள் கையில் உள்ளது.

*இருளகற்றி ஒளியேற்ற குறையகற்றி நிறைவேற்ற*
*சிறையகற்றிச் சீரையேற்ற குருவருளாம் திருவருள் நாடு.*



# திருத்தணி முருகா! வழித்துணை வருவாய்!

– முனைவர். ச. செந்திலாண்டவன், சென்னை.
94445 82856.

### முதல்வன் முருகனே

இம்மை நலன்களை வள்ளி மூலமாகவும், மறுமை நலன்களைத் தெய்வானை மூலமாகவும், வீடு பேற்றை வேலின் மூலமாகவும் வழங்கும் வரதன் திருத்தணிகை முருகன். எனவே சிந்தையில் சீரிய ஒழுக்கத்தோடு, வந்து பணியும் அடியார்க்கெல்லாம் எல்லா வளமும் நலமும் அருள்கின்ற பெருமானாகத் திருத்தணிகை மலையில் வீற்றிருந்து அருள் புரிகின்றான்.

### அருள் நலம் பெற்ற அடியார்கள்

இத்தணிகை முருகனை திருப்புகழ்ப் பாடல்களில் போற்றி வணங்கிய அருணகிரியார், திருத்தணிகைச் சந்நிதி முறை எழுதிய கந்தப்ப தேசிகரும், திருத்தணி முருகன் பிள்ளைத்தமிழ் பாடிய வேங்கடசுப்ரமணியனும் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர். திருத்தணி முருகன் பிள்ளைத் தமிழ்ப் பாட்டிலிருந்து முருகன் பெருமைகளைப் பாடும் ஒரு பாடலைப் படித்து அறிந்து, அடியார்களுக்கு அவனருள் செய்யும் முறைமையைக் காண்போம்.

### வினை தீர்க்கும் விமலன்

அழகெலாம் நிறைந்த கருணைக்குன்றாக, வினைகள் தீர்க்கும் விமலனாக அருள்புரியும் தணிகை முருகனை இப்பிள்ளைத்தமிழ்ப் பாடல் ஒன்றின் வழியே உணர்ந்து மகிழ்வோம்.

### கருணை புரியும் கந்தனின் கண்கள்

பார்க்கின்ற அடியார்களுக்கெல்லாம், முருகப் பெருமானுடைய திருமுகம் களிப்பை உண்டாக்கும். களிப்போடு அன்பு மணம் கமழ்ந்து, சிறந்து நிற்கும். அவனுடைய கண்கள் பன்னிரண்டும் கருணை கசிந்து, அடியார்களுக்குக் கருணை மழையைப் பொழியச் செய்யும்.

### அழகே முருகன்! முருகே அழகு!

இவ்வுலகில் எல்லா உயிர்களிலும் தன் வடிவே நிறைந்திருப்பதால் எல்லா உயிர்களின் திருமேனி யிலும் “முருகு” என்ற அழகே ஆகின்றது. அவனு டைய ஆறிரண்டு தோள்களிலும் ஓங்கி நிற்கின்ற வெற்றியே, எல்லா உயிர்களுக்கும் வெற்றியைப் போற்றித் தருகின்றது. தளிர் போன்ற முருகனுடைய மென்மையான திருக்கரங்கள் உயிர்களுக்கும் அருள் வழங்கும் வள்ளல் திருக்கரங்களாக அமைந் துள்ளன. அது மட்டுமா? உலக வாழ்க்கையில் அஞ்சி நிற்கும் “உள்ளங்களுக்கு அபயம் நல்கி வளர்த்து சிறக்கின்றன. திருத்தணி முருகனது “தாளிணை” – திருவடிகள் இரண்டும் பேரருள் சுரக்கும். கடல் போலத் ததும்பி வழிந்தாடுகின்றது. வண்டுகள்

மொய்க்கின்ற தாமரை மலர்களாக அவனது திருவடிகள் விளங்கு கின்றன. அத்தாமரை மலரில் நடனமாடும் நிலையில் நிற்கின்றான்.

### தாமரை மலரில் செங்கீரை நடனம்

அப்பேர்ப்பட்ட அழகன் முருகன் அடியார் களது வேண்டுகோளுக்காக தாமரை மலர்களின் மேல் செங்கீரை ஆடி அருள்கின்றான். பெருமானே! எங்களுக்காக ஆடிவா! ஆடி வந்து அருள் நலம் சிறக்கச்செய்வாய்! ஆதித்திருத்தணி மேவி நிலைத்தவனே! செங்கீரை ஆடி வா! என்று பக்தர்கள் எல்லாம் வேண்டிட அவன் அவ்வாறே ஆடி வருகின்ற அப்பிள்ளைத் தமிழ் பாடல்,

*களிவளர் வதனம் தனிலவிழ் அன்பு*
*கமழ்ந்து சிறந்தாடக்*
*கண்பனி ரண்டில் அரும்பிடு கருணை*
*கசிந்துவடிந்தாட*
*மிளிர்தர யாவும் தன்வடிவாகிய*
*மேனியில் முருகாட*
*வீறுயர் ஆறிரு தோளினில் ஓங்கும்*
*வென்றி பொலிந்தாடத்*
*தளிர்பொரு கையில் வண்மையொ டபயம்*
*தங்கி வளர்ந்தாடத்*
*தாளிணை மலரில் பேரருள் வாரி*
*ததும்பி வழிந்தாட*
*அளிதவழ் மலரில் நடமிடு முருகா!*
*ஆடுக செங்கீரை!*
*ஆதி திருத்தணி மேவி நிலைத்தவ*
*ஆடுக செங்கீரை!*

இப்பிள்ளைத்தமிழ்ப் பாடல் வாயிலாகத் திருத்தணி முருகன் திருவருள் இயல்பினை உணர்ந் தோம். ஆடிக்கிருத்திகையில் அழகன் முருகனிடம் நம் வேண்டுதல்களைக் கூறி பாடி மகிழ்ந்து, அருள் நலம் பெறுவோம்.

## இறைச் சிந்தனை



இந்திரன் மனைவி இந்திராணி ஆசையாக ஒரு கிளி வளர்த்தாள். அந்தக் கிளி நோய்வாய்ப்பட்டது. உடனே இந்திரனிடம் சென்று கிளி இறக்கும் நிலையில் உள்ளது அதை எப்படியாவது காப்பாற்றுங்கள். கிளி இறந்தால் நானும் சேர்ந்து இறந்து விடுவேன் என்றாள்.

உடனே இந்திரன், உயிர்களைப் படைக்கும் பிரம்மனிடம் சென்று இதைப் பற்றி கூறினார். அதற்கு பிரம்மன் உயிர்களைப் படைப்பது நான் தான். அதைக் காப்பது விஷ்ணுவின் தொழில். நானும் வருகிறேன் அவரிடம் செல்லலாம் என்று சென்றனர். அதன் பின் விஷ்ணு உயிர் களைக் காப்பது மட்டுமே தனது தொழில். உயிர்களை எடுப்பது சிவனின் தொழில். எனவே அவரிடம் சென்று முறையிடலாம் வாருங்கள் நானும் உங்களுடன் வருகிறேன் என்று மூவரும் சென்றனர்.

சிவனும் உயிர்களை எடுக்கும் தொழிலை எமதர்மனிடம் கொடுத்து விட்டேன். நானும் எமனிடம் வருகிறேன் என்றார். நடந்தவற்றை எமனிடம் கூற, எல்லா உயிர்களின் ஆயுளையும் ஒரு ஓலையில் எழுதி அதை ஒரு அறையில் கட்டி விடுவேன். அது என்றைக்கு அறுந்து விழுகிறதோ அன்று அந்த உயிர் பிரிந்து விடும். எனவே கிளியின் ஓலையை எடுத்து மாற்றி எழுதலாம் வாருங்கள் என்று அந்த அறைக்கு அழைத்து சென்றார். உள்ளே நுழைந்ததும் ஒரு ஓலை அறுந்து விழுந்தது. அதை எடுத்து படித்ததில் இந்திரன், சிவன், பிரம்மன், விஷ்ணு, எமன் இவர்கள் ஐவரும் ஒன்றாக இந்த அறைக்குள் வரும்போது கிளி இறந்து விடும் என்று எழுதியிருந்தது.

படைத்தவன் நினைத்தால் கூட ஆயுளை மாற்ற முடியாது. எனவே நாம் வாழும் காலம் முழுவதும் இறைச் சிந்தனையுடன் சந்தோஷமாக வாழ்வோம். ***– திரு. எம். அசோக் ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.***

**புராண வரலாறு :**

சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கில், எம்பெருமான் பார்வதிக்கு அருளியது இது. பார்வதிக்கும் சிவபெருமானுக்கும் இடையே நடந்த சொக்கட்டான் ஆட்டத்தில், பார்வதி தோற்கவும், அதில் சிவபெருமான் தான் பெற்ற வெற்றியை மகிழ்ச்சி ஆரவாரத்தால் வெளியிடவும், அதனைக் கண்டித்துக் கூறிய உமையவள், ஊடல் உணர்ச்சியில் சில உரைகளைச் சிவபெருமான் வடிவம், தொழில், ஆடை, ஆபரணம் குறித்து விளையாட்டாகச் சொல்ல, அதனால் கோபம் அடைந்த ருத்ரன் உமையவளின் அழகு அழியும் முறையில் உமையவளைச் சபிக்க, பார்வதி பிழையுணர்ந்து வேண்ட, ருத்ரன் காஞ்சியில் காமகோட்டத்தில் பஞ்ச தீர்த்தக் கரையில், வாமனரை நோக்கித் தவம் செய்தால் சாபம் நீங்கும் என்று கூறினார்.

பார்வதி சிவபிரான் சொன்னவாறே ஒற்றைக் காலில் நின்று தவம் செய்து வாமனரின் அருளைப் பெற்று, அவரது அறிவுரையால் அவ்விடத்திலேயே மணலால் சிவலிங்கம் செய்து வழிபட்டு, பழைய அழகைப் பெற்றுச் சிவபிரானை அடைந்தாள் என்பர். அப்போது அவ்விடத்திற்கு வந்த திருமகளுடன், உமையவள் காமாட்சி என்ற பெயரில் உரையாடிக் கொண்டு இருந்ததை, மறைந்து நின்று கேட்ட பகவானைப் பார்த்து காமாட்சி அன்புடன் "கள்வா" என்று சொல்ல தனக்கு அருளிய எம்பெருமான், தன் அருகில் எப்போதும் இருந்து இங்கு வருவோர்க்கு எல்லாம் அருள வேண்டும் என்று வேண்டியபடியால், ஆதிவராகப் பெருமானாக அன்று முதல், அவ்விடத்தில் காட்சி அளிக்கிறான் என்றும், அவ்விடமும் திருக்கள்வனூர் என்ற திவ்யதேசமாக விளங்கத் தொடங்கியது என்றும் கூறுவர். அப்போது அங்கு வரும் பக்தர்களுக்குத் தொல்லை கொடுத்த ஒரு பூதத்தினைப் பற்றி உமையவள் பகவானிடம் சொல்ல பகவான் நின்ற திருக்கோலத்திலும், அமர்ந்த நிலையிலும், கிடந்த நிலையிலும் பூதத்துடன் போரிட்டு ஜெயித்ததையும், அதனை உணர்த்தும் இம்மூன்று படிவங்களையும் காமாட்சி திருக்கோயில் திருக்குளத்தின் வடகிழக்கு மூலையில் ஒரு மண்டபத்தில் காணலாம்.

**சிறப்புகள் :**

திருமங்கையாழ்வார், திருநெடுந்தாண்டகத்தில், "கார்வானத்துள்ளாய்! கள்வா!" என்ற தொடரில் "கள்வா" என்ற ஒரே சொல்லால், மங்களாசாசனம் செய்யப்பெற்ற திவ்யதேசம் இது ஒன்றே. திருக்கார்வானம் என்ற திவ்ய தேசத்தில் எம்பெருமானின் திருப்பெயர் கள்வர் என்று இருந்தாலும், அவர் வெண்ணெய் களவு செய்தவராகவும், "கார் வானத்து உள்ளாய்" என்று பிரித்து, பின்பு, கள்வா! என்று வந்திருப்பதால் இரண்டும் வெவ்வேறான திவ்ய தேசங்களே என்றும் பெரியோர்கள் சொல்வர். ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை களவு என்ற சொல்லுக்கு "பிறருக்கு உரிய பொருளை அபஹரித்தல்" என்று பொருள். "அபஹாரமாவது – ஒருவனுக்காய் இருக்கும் அத்தை (பொருளை) அவனுக்கு ஆகாத படி மறைக்கை" – இந்த களவு எம்பெருமானிடத்திலும்

# திருக்கள்வனூர்

## (பெரிய காஞ்சிபுரம்)



108 திவ்ய தேச வைபவம் -86

– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

உண்டு. உலக மானிடர்களிடத்தும் உண்டு என்கிறார். பகவானின் திருமேனி அவனுக்கு உரியது அல்ல. அதை சேவிக்கும் அடியார்களுக்கே உரியது. ஆதலால் அதை அடியவர்களுக்குக்காட்டாது மறைக்கும் தொழிலை எம்பெருமான் செய்வதால், இவன் கள்வனாகிறான் என்றும் கருதுவர்.

"ஆச்ரிதனுக்கு (அடியவனுக்கு) அநுபாவ்ய மான (அநுபவிக்கத்தக்க) வடிவை, அவனுக்கு கொடாது ஒழிகையிரே, ஈச்வரனுக்கு அபஹார மாவது" காஞ்சியில் உள்ள பல திவ்ய தேசங்களுள் திருக்கள்வனூர் என்பது ஒரு திவ்ய தேசம். அவ்விடத்து எம்பெருமானது திருநாமம் கள்வன்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | ஆதிவராகப் பெருமாள். (மேற்கு நோக்கிய நின்ற திருக் கோலம்) |
| தாயார் | : | அஞ்சிலைவல்லி நாச்சியார், அபயநாச்சியார் என்றும் கூறுவர். |
| தீர்த்தம் | : | நித்திய தீர்த்தம். |
| விமானம் | : | வாமன விமானம். |
| மங்களாசாஸனம் | : | திருமங்கை ஆழ்வார். |
| ப்ரத்யக்ஷம் | : | அச்வத்த நாராயண முனிவர், பார்வதி, திருமகள். |
| ஆகமம் | : | காமாட்சி அம்மன் சந்நிதி சிவாச் சாரியார்களால் பூஜிக்கப்படு வதால் ஆகம வழிபாடு இல்லை. |

**த்யானச்லோகம் :**

*ஸ்ரீமச் சோரபுரே ப்ரஸித்த விபவ: க்ரோடா*
*க்ருதிர் நாயிகா*
*ஸெளம்யாகாரசிலேதி வாமநமிதிக்யாதே*
*விமாநோத்தமே*
*திஷ்டந் நித்ய ஸரோ வரஸ்ய சதடே*
*ப்ரத்யங்முகஸ் ஸர்வதா*
*அச்வத்தோபதி விஷ்ணு நாமகமுநே:*
*ப்ரதயக்ஷபூதோ ஹரி:*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

பாசுரம்

*"...காரகத்தாய்! கார்வானத்து உள்ளாய்!கள்வா!*
*காமரு பூங் காவிரியின் தென்பால் மன்னு*
*பேரகத்தாய்! பேராது என் நெஞ்சில் உள்ளாய்!*
*பெருமான் உன் திருவடியே பேணினேனே!"*

– திருமங்கையாழ்வார்

## பெருமாளுக்கு மணி அடிப்பதில் இவ்வளவு விஷயமா?

**மணி மணியான தகவல்**

- மணியை எப்போதும் ஒரே மாதிரியாக அடிக்கக்கூடாது.
- மெதுவாக அடித்தால் அர்க்யபாத்யாதிகள் சமர்ப்பிக்கப்படுகிறது என்று பொருள்.
- கணகணவென்று அடித்தால் தூபம், தீபம் ஆகிறது என்று பொருள்.
- இரண்டு பக்கமும் விசேஷமாக அடித்தால் திருமஞ்சனம் நடக்கிறது என்று பொருள்.
- மெதுவாக அடித்தால் பகவான் அமுது செய்கின்றான் என்று பொருள்.
- மணியின் தொனியை வைத்தே கோயிலில் என்ன நடக்கின்றது என்று தெரிந்து கொள்ளலாம்.
- மணி அடிப்பதை மஹான்களிடம் கற்றுக்கொள்ள வேண்டும்.
- மணியை வலது கையில் எடுத்து, இடது கையில் மாற்றிக் கொண்டு கற்பூர ஆரத்தித் தட்டை எடுக்க வேண்டும்.
- கண்டை என்பது சாமான்யமல்ல. அதில் பிரணவம் த்வனிக்கிறது. தேவதைகளை வரவழைக்கிறது. துஷ்ட ப்ரக்ருதிகளை ஓட்டுகிறது.
- பகவானுக்கு அமுது படைக்கும்போது நிசப்தமாக இருக்க வேண்டும். அமங்கலமான பேச்சுகள் காதில் விழக்கூடாது. மணி அடித்தால் அவை காதில் விழாது.

***– திரு. எம். அசோக் ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி, 9750-333-265***



*பண்டே உன் தொண்டம்பழ உயிரைஎன் னது என்று*
*கொண்டேனைக் கள்வன் என்று கூறாதே மண்தலத்தோர்*
*புள்வாய் பிளந்த புயலே! உனைக்கச்சிக்*
*கள்வா! என்று ஓதுவது எதுகண்டு?*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

## நாமாக்கள்

811. *ஓம் மஹாபூத: நம:*

மஹான்களால் நேசிக்கப்படுபவர்.

*ஓம் ஸத் கீர்த்தி: நம:*

அழியாத புகழ் பெற்றவள்.

812. *ஓம் மஹாநிதி: நம:*

மஹான்களை பொக்கிஷத்தைப் போல் ஆதரிப்பவன்.

*ஓம் நிஷேவ்யா: நம:*

யாவரும் நன்கு சேவிக்க எளிதாக இருப்பவள்.

813. *ஓம் குமத: நம:*

பூலோக அவதாரங்களில் மகிழ்பவன்.

*ஓம் அகவிநாசிநீ: நம:*

சர்வ பாவங்களையும் போக்குபவள்.

814. *ஓம் குந்தர: நம:*

"கும்" எனும் பாவத்தை நீக்குபவன்.

*ஓம் ஸம்ஜ்ஞா: நம:*

தெளிவான சிந்தையை அளிப்பவள்.

815. *ஓம் குந்த: நம:*

நீக்கிய பாவம் மறுபடி அணுகாமல் விலக்கு பவன்.

*ஓம் நிஸ்ஸம்சயா: நம:*

எவ்வித ஐயமும் இன்றி அடியார்கட்கு அருளு பவள்.

816. *ஓம் பர்ஜந்ய: நம:*

பக்தர்களைக் குளிரச் செய்பவன்.

*ஓம் பூர்வா: நம:*

அநுக்ரஹத்தில் பகவானையும் முந்திக் கொள்ப வள்.

817. *ஓம் பவந: நம:*

தானே பக்தர்களிடம் செல்பவன்.

*ஓம் வநமாலா: நம:*

அழகிய சோலைகளையும், செழிப்பான வனங்களையும் உடையவள்.

818. *ஓம் அநில: நம:*

பக்தர்களை அநுக்ரஹிக்க தூண்டுதல் வேண்டா தவன்.

*ஓம் வஸுந்தரா: நம:*

செல்வச் செழிப்பு வயல்களையும் தங்கச் சுரங்களையும் உடையவள்.

819. *ஓம் அம்ருதாஸ: நம:*

பக்தர்களுக்குத் தன் குணங்களாகிய அமுதத்தை ஊட்டுபவன்.

*ஓம் ப்ருது: நம:*

இலைகளைப் பெரிதாக்குபவள்.

820. *ஓம் அம்ருதவபு: நம:*

அமுதம் போன்ற திருமேனி அழகன்.

*ஓம் மஹோத்கடா: நம:*

உத்ஸவங்களில் பொலிவுடன் வாஸம் செய்ப வள்.

*ஸ்ரீமதே ஸுந்தரபிம்பவல்லீ (அஞ்சிலைவல்லி) நாயிகா ஸமதே ஸ்ரீஆதிவராஹ தஸ்கர (கள்வர்) பரப்ரம்மணே நம:*

### குறிப்பு :

காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கர்ப்பக்ருஹ இடப்புறமாக உள்ள சந்நிதி குளக்கரையில் மூன்று நிலைகளில் ஸ்வாமியையச் சேவிக்கலாம்.

*திவ்யதேச வைபவம் வளரும்...*

## 2024, ஆகஸ்ட் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 04 | ஸ்ரீசக்ரத்தாழ்வார் திருநட்சத்திரம் |
| 07 | ஆண்டாள் திருவாடிப்பூரம், திருமலையப்ப ஸ்வாமி புரசைவாரி தோட்டத்திற்கு எழுந்தருளுதல் |
| 08 | நாகசதுர்த்தி |
| 09 | கருட பஞ்சமி, 10 கல்கி ஜெயந்தி, |
| 13 | மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா நினைவு தினம் |
| 14–17 | திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 15 | இந்திய சுதந்திர தினம், 16 வரலக்ஷ்மி விரதம் |
| 19 | ஸ்ரீவிகனச ஜெயந்தி, ஹயக்ரீவ ஜெயந்தி |
| 20 | காயத்ரி ஜபம், 26 ஸ்ரீகிருஷ்ண ஜென்மாஷ்டமி |
| 27 | கோகுலாஷ்டமி |



# எதிகட்கிறைவன் யமுனைத் துறைவன்

- திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன்,
அம்பத்தூர், 9952929685

ஆசாரியர்கள் அருளிச்செய்த பிரபந்தங்களில் முதன்மை பெற்று விளங்குபவை ஆளவந்தார் அருளிச் செய்த பிரபந்தங்களே ஆகும். விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபனத்திற்கு வழிகாட்டியாய் விளங்கும் எட்டு மஹா கிரந்தங்களை அருளிச்செய்த ஆளவந்தாரின் பெருமை சொல்லிமாளாது. இவரின் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு இவரின் ஞானத்தையும், நம் ஸித்தாந்தத்திற்குச் செய்திருக்கும் உபகாரங்களையும் நாம் அறியலாம்.

### ஆகமப் பிரமாண்யம்

ஸ்ரீபகவத் சாஸ்திரம் எனப்படும் ஸ்ரீபாஞ்சராத்ரத்தின் பெருமையை இதில் கூறுகிறார். வேதம் போல ஸ்ரீபாஞ்சராத்ரமும் பிரபல பிரமாணம் என்று இதில் கூறுகிறார்.

### புருஷநிர்ணயம்

இந்த நூல் நமக்கு கிடைக்கவில்லை. ஆனால் பெரியவர்கள் இந்த நூலில் கண்ட விஷயங்களையும் கையாண்டு இருக்கிறார்கள்.

### ஸித்தித்ரயம்

ஒரு விஷயத்தை ஆய்ந்து ஆராய்ந்து ஸித்தாந்தத்தை வெளியிடுவது ஸித்தி எனப் படுகிறது. ஜீவாத்மா, பரமாத்மா, ஞானம் ஆகிய இம்மூன்றிடையே தத்துவங்களை நிர்ணயித்துத் தருவதால் ஆத்மஸித்தி, ஈச்வரஸித்தி, ஸம்வித் ஸித்தி என்று தம் நூல்களுக்கு பெயரிட்டு அருளினார். பகவானைச் சரணடைந்து அவனுடைய கருணா விசேஷத்தினால் ஜீவனுக்கு கர்ம பந்தம் விடுபட்டால் "ஸ்வதசுகீ" என்னும் நிலை சாஸ்வதமாக ஸித்திக்கும் என்று ஆத்ம ஸித்தியில் நிரூபித்தார். "கருமமும் கரும பலனும் ஆகிய காரணம் தன்னை" என்று ஆழ்வார் பேணின காரணமான பரம்பொருள் ஈச்வர ஸித்தியில் நிலை நாட்டி னார். ஸம்வித் ஸித்தியில் முக்கியமாக அத்வைத வாதத்தை நிரஸனம் பண்ணி விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை நிலைநாட்டினார். புறச்சமய வாதிகளை வாதப் போரில் தர்க்க வாதங்களால் தோற்கடித்து தாம் வெற்றி கொண்டு தம்முடைய ஸித்தாந்தத்தை நிலை நாட்டியதால் ஸித்தித்ரயம் ஆளவந்தாரின் வெற்றிக்கொடி எனப் போற்றப்பட்டது.

### கீதார்த்த ஸங்க்ரஹம்

கீதையின் ஸாரமான அர்த்தங்களை கீதார்த்த ஸங்க்ரஹம் என்னும் நூலில் 32 சுலோகங்களால் கூறினார். பக்தியை பகவான் கிருஷ்ணன் கீதையில் உபதேசித்தப்படி ஆளவந்தார் கர்ம யோகத்தாலும், ஞான யோகத்தாலும் வைராக்கியத்தாலும் உண்டாகும் பக்தி யோகம் ஒன்றுக்கே விஷயமாய் இருப்பவனாய் நாராயணன் கீதா ஸாஸ்த்ரத்தில் அறிவிக்கப்படுகிறான் என்று கீதார்த்த ஸங்க்ரஹம் எனும் நூலில் அருளிச் செய்துள்ளார்.

### சதுச்லோகி

அருமைப்பட்டு அறிய வேண்டிய உபய வேதப் பொருட்களை எளிதில் அறியும்படி பெரிய பிராட்டி விஷயமாக ஆளவந்தார் அருளிச் செய்த சதுச்லோகி

நான்கு சுலோகங்கள் கொண்ட இந்த நூலில் உலகின் நற்பேற்றிற்கு பிராட்டியின் கருணைக்குணமே காரணம் என்றும், உலகம் கடந்த நிலையிலும், உல கின் உள்ளீடாக இருக்கும் நிலையிலும் எம்பெருமா னுடன் ஒன்று பட்டே இருக்கிறாள் என்று பெருமாளும் பிராட்டியும் எப்போதும் சேர்ந்திருப்பதை அனுபவித்து அவர்கள் கருணை யாலே பேரானந்தம் பெற்றுத் துதியை நிறைவு செய்கிறார்.

### ஸ்தோத்ர ரத்னம்

வேதாந்த அர்த்தங்களை அனைவரும் எளிதில் இனிமையாக அனுபவிக்கலாம்படி ஸ்தோத்திரங் களுக்கு முன் உதாரணமாய் விளங்குவது ஆளவந்தார் அருளிய ஸ்தோத்திர ரத்தினமாகும். பண்டிதர், பாமரர், பெண்டிர் என்று இல்லாது எல்லோருக்கும் எளியவையாயிருக்கும் பகவானு டைய சரணகமலங்களையே பற்ற வேண்டும். அவையே நமக்குத் தஞ்சம் என்று சரணாகதியை அனுஷ்டித்து பகவானே உனக்கு நான் கைங்கர்யம் செய்து எப்போது நான் ஆனந்தப்படப் போகிறேன் என்று கூறாமல் உன்னை எப்போது ஆனந்தப் படுத்தப் போகிறேன் என்று சொல்லி இருப்பது நம்முடைய கைங்கர்யத்தினால் எம்பெருமான் ஆனந்திக்க அது கண்டு நாம் ஆனந்திக்க வேண்டும் என்று தம் நூலில் கூறியிருக்கிறார்.

ஆளவந்தார் தென்ஆற்காடு மாவட்டத்தில் காட்டு மன்னார் கோயில் என்ற க்ஷேத்திரத்தில் சுவாமி நாதமுனிகளுடைய புத்திரரான ஈச்வரமுனிகளுக்கு குமாரராய் தாது வருடம் (கி.பி. 976) அவதரித்தவர். மணக்கால் நம்பி என்ற ஆசார்யரால் யமுனைத் துறைவன் என்ற நாம கரணம் சூட்டப்பெற்றார். இளமைப் பருவத்திலேயே சகல சாஸ்திரங்களையும் கற்றறிந்தார். சோழராஜ புரோகிதனாகிய ஆக்கியாழ் வானை வாதில் வென்றதால் அரச பத்தினியால் எனை ஆளவந்தீரோ என்று கொண்டாடியதால் இவர் ஆளவந்தார் என அழைக்கப்பட்டார்.

மணக்கால் நம்பி என்ற ஆசாரியரால் சரணாகதி சாஸ்திரத்தில் ஈடுபட்டார். மனம் உருகி அரச வாழ்க்கையைத் துறந்து ஸ்ரீரங்கம் நம்பெருமாளால் ஆட்கொள்ளப்பட்டு திருவரங்கத்தை வைணவத் தலைநகராகக் கொண்டு எனக்குப் பெரியோர்கள் வைத்த மாநிதி கிடைத்தது என்றுணர்ந்து, அவனுக்கே கைங்கர்யங்கள் செய்து கொண்டு அன்பர்களின் ஆசைக்கிணங்க வைணவ குருவாக பீடத்தில் அமர்ந்தார்.

காஞ்சி வரதராஜப் பெருமாளுக்குத் திருமஞ்சன தீர்த்த கைங்கர்யம் செய்து வந்த இளையாழ்வாரை கண்டு தமக்குப் பிறகு குருபீடத்தை அலங்கரிக்கத் தகுந்தவர் இவரே என நினைத்து “ஆம் முதல்வன்” என்று விசேஷ அனுக்கிரஹம் செய்தார்.

மேலும் ஆளவந்தாரின் குறைகளை பிரம்ம சூத்திரத்திற்கு விசிஷ்டாத்வைத முறையில் பாஷ்யம் (அர்த்தங்கள்) தயாரிக்க வேண்டும். நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழிக்கு ஒரு வியாக்யானம் அமைக்க வேண்டும். வியாச பராசரர்களின் திருப்பெயர்களை இரண்டு பிள்ளைகளுக்கு இட வேண்டும் என்ற மூன்று குறைகளையும் நிவர்த்தி செய்தார் இராமாநுஜர்.

ஆளவந்தாரின் முக்கிய சீடர்கள்: பெரிய நம்பி, திருகோட்டியூர் நம்பி, திருக்கச்சி நம்பி, திருமலை ஆண்டான் முதலானோர் வைணவத்திற்காக பாடுபட்டவர்கள் ஆவர். ஆளவந்தாருக்குப் பிறகு வைணவ பீடாதிபதியாக பகவத் இராமாநுஜர் அலங்கரித்தார். இவரது குமாரர்கள் திருவரங்கப் பெருமாள் அரையர், தெய்வத்துக்கரசு நம்பி, பிள்ளையரசு நம்பி, சொட்டை நம்பி என்பவர்கள்.

“தூய் நெறிசேர் எதிகட்கு இறைவன் யமுனைத் துறைவனின்
இணையடியாம் கதி பெற்றுடைய இராமாநுஜன்”

(இராமாநுஜ நூற்றந்தாதி 21) என்று திருவரங்கத்து அமுதனார் அருளினார். “எதிகட்கு இறைவன்” என்பது யமுனைத்துறைவராம் ஆளவந்தாரையே சேரும். ஆளவந்தார் தன் ஸ்தோத்ர ரத்னத்தில் நம்மிடம் காணப்படும் தீய குணங்களை நீக்கிப் பகவானிடம் கைங்கர்யம் செய்ய வேண்டும் என உபதேசிக்கிறார். நமக்காகப் பாடு படும் நம் ஆசாரியர் ஆளவந்தாருடைய “நைச்யானு சந்தானமாக” அருளிய பாசுரங்களை பகவானுடைய சந்நியில் நாம் அனைவரும் ஆத்மார்த்தமாக கூறி மெய் சிலிர்த்து, கண்களில் தாரை, தாரையாக கண்ணீர் வழிய உய்யும் வகை தேடுவோமாக!

ஆளவந்தார் திருவடிகளே சரணம்!

சென்ற இதழின்
தொடர்ச்சி...



# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# இராமாநுசர்

– ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

*அறுசமயச் செடியதனை அடி அறுத்தான் வாழியே*
*அடர்ந்துவரும் குதிட்டிகளை அறந்துறந்தான் வாழியே*
*செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்து விட்டான் வாழியே*
*தென்னரங்கர் செல்வமுற்றும் திருத்தி வைத்தான் வாழியே*
*மறையதனில் பொருளனைத்தும் வாய்மொழிந்தான் வாழியே*
*மாறனுரை செய்த தமிழ்மறை வளர்த்தோன் வாழியே*
*அறம் மிகு நற்பெரும்பூதூர் அவதரித்தான் வாழியே*
*அழகாரும் எதிராசர் அடி இணைகள் வாழியே.*

**பதவுரை :**

அறுசமயச் செடியதனை – வேதத்துக்குப் புறம்பான ஆறு மதங்களான மரங்களின், அடி அறுத்தான் – வேரை வெட்டியவர், வாழியே – நித்யமாக வாழ வேணும். அடர்ந்து வரும் – நெருங்கி கூட்டமாய்க்கூடி மேலிட்டு வருகிற, குதிட்டிகளை – வேதத்திற்கு அவப்பொருள் கூறும் சமயத்தவர்களை, அறந்துறந்தான் – வாசனையோடே துறந்தவர், வாழியே – நித்யமாக வாழ வேணும். செறுகலியை – இவை எல்லாவற்றுக்கும் காரணமாய் உலகெங்கும் காடமாய் மூடி வருகிற கொடிய கலியை, சிறிதும் – கொஞ்சமும், அற– இல்லாதபடி, தீர்த்துவிட்டான் வாழியே – போக்கடித்தவர் நித்யமாய் வாழ வேணும்.

தென்னரங்கர் செல்வம் முற்றும் – அழகு நிரைந்தவரான பெரிய பெருமாளுடைய திருச்செல்வம் எல்லாவற்றையும், திருத்தி வைத்தான் வாழியே – கட்டளைப்படி பண்ணி அருளினவர் நித்யமாய் வாழ வேணும். மறையதனில் – வேதத்தில் தெரிவிக்கிற, பொருளனைத்தும் – அர்த்தங்கள் எல்லாம், வாய் மொழிந்தான் வாழியே – ஸ்ரீபாஷ்யம் முதலான நூல்கள் மூலமாக அருளிச் செய்தவர் நித்ய மங்களமாய் வாழ வேண்டும்.

மாறன் உரை செய்த – நம்மாழ்வார் அருளிச் செய்த, தமிழ் மறை – திராவிட வேதத்தை, வளர்த்தோன் வாழியே – வளரச் செய்தவர் நித்யமாய் வாழ வேணும். அறம் மிகு – அதன் கருத்தான சரணாகதி உலகில் வளர, நற்பெரும்பூதூர் – விலக்ஷணமான பெரும்பூதூரில், அவதரித்தான் வாழியே – திருவவதரித்தவர் நித்யமாய் வாழ வேணும். அழகாரும் – திருமேனி அழகு நிறைந்த, எதிராசர் – யதிகளுக்கு எல்லாம் தலைவரான

இராமாநுசர், அடி இணைகள் – எல்லார்க்கும் பற்றப்படுமதான இரு திருவடிகள், வாழியே – நித்ய மங்களமாய்ச் செல்ல வேணும்.

(அறுசமயச் செடியதனை அடி அறுத்தான் வாழியே) – *''பொய்ம்மை அறுசமயம் போனது பொன்றி''* (இரா. நூ.49) என்று அமுதனார் அருளியது காண்க. அதாவது வேதத்தை இசையாதனவாகையாலே உண்மை அல்லாததான ஆறு சமயமும் முடிந்து போயிற்று என்றபடி. வேதத்துக்குப் புறம்பானவைகளாகையாலே மிகவும் தாழ்ந்தவைகளான பௌத்த ஜைந மாயாவாதிகளுடைய கெட்ட நோக்குடைய மதங்களிலே ஊன்றினவர்களாய்க் கொண்டு உலகம் க்ஷணிகம் என்றும், தத்துவம் ஞான மாத்ரம் என்றும், ப்ரபஞ்சம் மித்யை (மாயை) என்றும், ப்ரஹ்மம் சிந்மாத்ரம் என்றும் உள்ள வேற்றுமையை அழித்தும், வாக்கு ஒன்றினாலேயே வேதத்தை அங்கீகரித்து வைத்து, அதில் கெட்ட நோக்கு கல்பனங்களைப் பண்ணியும், முடிவிலே வேதத்தை மித்யா கோடியிலே ஆக்கியும், இப்படி கெட்ட தர்க்கங்களைச் சொல்லி கலக்கம் செய்பவர்களைத் தாம் அருளிய ப்ரஹ்மஸூத்ர உரையான ஸ்ரீபாஷ்யம் மூலமாக அழித்தார் எம்பெருமானார்.

இதுபற்றியே *''கூறும் சமயங்கள் ஆறும் குலைய''* (இரா. நூ.46) என்று அமுதனார் வாக்கு. அப்படிப்பட்ட சாக்ய, உலூக்ய, அக்ஷபாத, க்ஷபண, கபில பதஞ்சலி என்று வேதத்துக்குப் புறம்பான ஆறு மதங்களாகிற செடிகளை வேரோடு அறுத்து ஒழித்த இராமாநுசர் நித்யமாக வாழ வேண்டும்.

(அடர்ந்துவரும் குதிட்டிகளை அறந்துறந்தான்) நெருங்கி வந்த குத்ருஷ்டிகளை *''நான்மறையும் நிற்கக் குறும்பு செய் நீசரும் மாண்டனர்''* (இரா. நூ.99) என்கிறபடியே ருக் முதலான நான்கு வகைப்பட்ட வேதங்களை ப்ரமாணமாக அங்கீகரித்தும், அவற்றுக்குப் பொருளை விரித்து உரைக்கப்பட்டவைகளான தாத்பர்ய விஷயங்களைச் சொல்லாமல் தாமஸ புத்தியாலே விபரீத அர்த்தங்களை கல்பித்து, அவற்றை விரும்பியபடியே நடப்பித்து உலகோரை அவரவர்களுடைய கெட்ட வாதத்தாலே மோகிப்பித்து, மாய வாதிகளையும் சங்கர, பாஸ்கர, யாதவர்கள் மூவரையும் சேரப்பிடித்து முடியும்படி வேரோடே துரத்தி அருளின இராமாநுசர் நித்யமாக வாழ வேண்டும்.

(செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்து விட்டான்) *''கலியும் கெடும் கண்டு கொள்மின்''* (திருவாய்.5-2-1) என்று நம்மாழ்வார் அருளியபடியே அவதரித்து கலியின் கொடுமையைப் போக்கினவர். *''செறுகலியால்*

## ஸப்தகிரி மே 2024 விடைகள்

1. வைகாசி – சுவாதி.
2. திருவரங்கம்.
3. தன்வந்திரி.
4. ஜயன், விஜயன்.
5. மணவாள மாமுனிகள்.
6. அழகிய சிங்கபிரான்.
7. சித்திரை, திருவாதிரை.
8. நம்மாழ்வார்.
9. இராமாநுஜர்.
10. இராமபிரான்.
11. சிவகுரு–ஆர்யம்பாள்.
12. ஸ்ரீராமபிரான்.
13. மதுரை.
14. பட்டினத்தார்.
15. அன்னமய்யா.



வினாடி வினா

## போட்டி எண். 22

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி எஸ். அனுஜெயமித்ரா,
 இரத்தினம் தெரு, சேலம்.
2. செல்வன் வ. ஜெகதீஸ்வரன்,
 குன்றத்தூர், சென்னை.
3. செல்வி கீதா கவிதா,
 வடபழனி, சென்னை.

வருந்திய ஞாலத்தை வண்மையினால் வந்தெடுத்தளித்த அருந்தவன்'' (இரா. நூ.32) என்பர் அமுதனார்.

மேலும் ''அறுசமயம் போனது பொன்றி இறந்தது வெங்கலி'' (இரா. நூ.49) என்கிறபடியே இவை எல்லாவற்றுக்கும் காரணமாய் உலகெங்கும் நெருக்கியதாய் மூடி வருகிற கலியை, கொஞ்சங்கூட மிச்சமாகாதபடி முடித்துவிட்ட இராமாநுசர் வாழ்ந்தருள வேணும்.

(தென்னரங்கர் செல்வமுற்றும் திருத்தி வைத்தான்) இராமாநுசர் முதன்முதலாக திருவரங்கனைச் சேவிக்கும்போது ''பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் என்கிற உபய விபூதி ஐஸ்வர்யத்தையும் உமக்கும் உம்முடையார்க்கும் தந்தோம். நம்முடைய வீட்டின் காரியத்தையெல்லாம் ஆராய்ந்து நடத்தும்'' என்று அரங்கன் அருளியதற்கு ஏற்ப ''ஸ்ரீமந் ஸ்ரீரங்கஸ்ரீயநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய'' என்கிறபடியே பெரிய பெருமாளுடைய திருச்செல்வமெல்லாம் கட்டளைப்படும்படி பண்ணி அருளினார்.

எங்ஙனேயென்னில் – இவர் எழுந்தருளியிருந்து கருவூலங்கள் எல்லாம் ஆராய்ந்து, அமுதுபடி, சாற்றுபடி, திருமாலை, திருவிளக்கு முதலானவற்றையும், திருவாராதனத்துக்கு வேண்டியவற்றையும் குறைவற நடத்தி வந்தார். கோயில் அனைத்துக் கொத்தில் அவரவர் ஏற்றத்தாழ்வுகளையும் ஆராய்ந்து, திருமதிள் முதலான இடங்களில் திருப்பணிகளையும் செய்வித்தார்;

வண்டினமுரல்வதும், மயிலினம் ஆடுவதும், குயிலினம் கூவுவதும், கொண்டல் மீதணவுவதுமான மணம் மிக்க பொழில்களில், திருச்செண்பகம் தொடக்கமான திவ்விய புஷ்பத் தருக்களையும், திருநந்தவனங்களையும் மற்றும் திருவரங்கச் செல்வனாருடைய திருவிளையாடல் சீர்மை இடங்களையும் ஆராய்ந்து அவற்றுக்குச் செய்ய வேண்டியதெல்லாம் செய்வித்தார்;

மேலும் திருவரங்கனுக்குச் செல்வமான எல்லா கைங்கர்யங்களும் காலாகாலங்களிலே நடக்கும்படி பத்து குடும்பங்களிலுள்ளார்க்கும் கட்டளை இட்டார்; அதாவது – ஸ்ரீமத் ஸ்ரீரங்கராஜருடைய ஸ்ரீமத் ஸாஸனத்தின்படி பெரிய கோயில் கைங்கர்யம் பண்ணி வருகிற 1) கோவணவர்க்குடவர், 2) பட்டர்கள், 3) ஸ்வாமிக்கு உடைவாளும், சட்டையும் எடுக்கும் காவிரியின் நீர்த்துறையிலுள்ள மறையோர் உள்ளிட்டார், 4) நம் இராமாநுசமுடையார் என்று அபிமானிக்கும் படியான பல தேச ஸ்ரீவைஷ்ணவர்கள், 5) பண்ணிலே பாடுவாரான விண்ணப்பம் செய்வார், 6) தழை இடுவார், 7) பெருமாளுக்குத் திருமஞ்சனமும் எடுத்துத் திருமாலையும் கட்டுவார்.


8) திருவாசல் காக்கும் ஆரியர்கள், 9) பெருமாளுக்கு திருவடிப் பக்கம் பிடிப்பார், 10) திருத்தோப்புச் செய்யும் ஸ்ரீபுண்டரீகர் ஆகிய 10 குடும்பத்திலுள்ளாரும் ஆசார நடவடிக்கைகள் குறைவின்றியே பெருமாளுக்கு கைங்கர்யமாக நிவேதித்த காரியத்துக்கு நல்லருமாய், நம் சடகோபன், கலியன் உள்ளிட்டாருடைய பிரபந்தங்களிலே பரிசீலனமுடையாரையும் மிகவும் கருணையால் கீழ்ச் சொன்னவர்களை அந்தந்த ஸ்ரீகார்யங்களிலே நியோகித்தருளினார்;

அவர்களுக்கு உண்டான பணம், பிரஸாதங்களும் கொடுக்கும்படி கட்டளை இட்டார்; இங்ஙனே பலவிதமான தொழிலாளிகளை ஏற்படுத்தி திருவரங்கர் செல்வத்தை திருத்தினார் இராமாநுசர். விரிப்பில் பெருகும்.

(மறையதனில் பொருளனைத்தும் வாய்மொழிந்தான்) ப்ரமாணத்தில் வந்தால் வேதத்தில் மதி மயக்கம் போக்கின அளவன்றிக்கே வேதாந்தத்தின் பொருளையெல்லாம் அறியும் வகையில் முதன்முதலாக வேதார்த்த ஸங்க்ரஹம் என்னும் க்ரந்தத்தைத் திருமலையில் திருவேங்கடவன் முன்பாக உபன்யஸித்தார்.

வேதாந்தத்தின் பொருள்களாவன – "தத்த்வமஸி", "ஸதேவ ஸௌம்ய", "நேதிநேதி", "ஏகத்வேஸதி", "சரீர ஆத்ம லக்ஷணம்", "போக்தா போக்யம்" முதலான பல உபநிடத வாக்யங்களை விளக்கியும், மற்றும் ஸ்ரீபாஷ்யம் , வேதாந்த தீபம், வேதாந்த ஸாரம் முதலான ஒன்பது க்ரந்தங்கள் மூலமாக மறைப்பொருளை வெளிக்கொணர்ந்தவர் ஆவர்.

இராமாநுஜ வாழித்திருநாம உரை தொடரும்....



# ஏகாதசி விரத வழிபாடு

- திரு.துளசி கிருஷ்ணா, சென்னை.

**முன்னுரை :**

கிருஷ்ணபக்ஷ ஏகாதசி, சுக்லபக்ஷ ஏகாதசி இரண்டுமே கைக்கொண்டு அனுசரிக்க வேண்டியவை. இந்த விரதம் வீடுபேறு அளிப்பதாகும். இந்த விரதம் மூன்று நாட்கள் சேர்ந்து அனுட்டிக்க வேண்டியுள்ளது. இந்த ஏகாதசி விரதங்கள் உத்தமமானவை. பாபங்களை அழிக்கவல்லது. இவ்வளவு பெருமையுள்ள விரதத்தைப் பற்றி நாம் அறிவது அவசியம் என்று சநாதனர் நாரதருக்கு கூறலுற்றார்.

நாரதா! இந்த மூன்று நாட்களில் நான்கு வேளை போஜனம் கைவிடப்பட வேண்டும். முதல் நாளிலும், துவாதசியிலும் ஒவ்வொரு வேளை போஜனம் விடத்தக்கது. மத்திம தினமான ஏகாதசி அன்று இரு வேளை போஜனமுமே விடப்பட வேண்டும். உனக்கு இந்த மூன்று தின விரதங்களை அனுஷ்டித்து நியமங்களைக் கூறுகின்றேன். இரும்பு பாத்திரம், ஊன், மது பரான்னம், புனர் போஜனம், உடல் உறவு முதலிய 10 நீஹ்ன ஆசாரங்கள் விடப்பட வேண்டும். சூதாடுதல், தூக்கம், வெற்றிலை உண்ணல், பிறர் நிந்தனை, களவு, துன்புறுத்தல், கோபம், பொய் முதலியவைகளும் விடப்பட வேண்டும். இப்படி விரதத்துக்குத் தயாரானவர் சக்தி உள்ளவரானால் ஏகாதசி உபவாசம் இருக்க எல்லையில்லா பலன் கிடைக்கிறது.

சநாதனர் கூறலுற்றார். நாரதா! நான் உனக்கு துவாதசி விரதத்தைப் பற்றிக் கூறுகிறேன். இந்த விரதத்தை அநுட்டித்து திருமாலுடைய சிறந்த பிரியத்துக்கு ஆளாகலாம். சைத்ர சுக்ல துவாதசிக்கு மதன விரதம் என்று பெயர். வெண்மையான நல்அரிசியைப் பரப்பி, அதன் மீது புதிய கலசத்தை நிறுத்த வேண்டும். கலசத்தில் ஓட்டைகள் இருக்கலாகாது. அதை கரும்பு, பழங்கள், இரண்டு வெண்மை நிற வஸ்திரங்கள், சந்தனம் முதலானவைகளால் அலங்கரித்து வைக்க வேண்டும். நானாவித பக்ஷணீய பதார்த்தங்களோடு கூடியதும், தன் சக்திக்குத் தக்கவாறும் தங்கத்தால் அலங்கரிக்கப்படவும் வேண்டும். அதற்கு மேல் வெல்லம் நிறைந்த தாமிரப் பாத்திரத்தை வைக்க வேண்டும். அந்தப் பாத்திரத்தில் காம ஸ்வரூபியான அச்சுதனுக்கு தூப தீப கந்தாதி உபசாரங்கள் செய்ய வேண்டும்.

ஏகாதசி உபவாசம் இருந்து மறுநாள் காலை புனர் பூஜை செய்ய வேண்டும். இங்கு உபயோகப் படுத்திய பொருட்களை ஸத்பாத்திரங்களுக்கு தானம் அளிக்க வேண்டும். பிறகு பிராமண போஜனம் செய்வித்து தட்சணை கொடுக்க வேண்டும். இப்படி ஒரு வருஷத்திற்கு ஒவ்வொரு துவாதசியையும் அநுட்டிக்க வேண்டும். பூஜை பண்ணி வைத்த ஆசாரியருக்கு தகுந்த வெகுமதி அளிக்க வேண்டும். அவரிடம் காமதேவனான திருமாலுடைய தங்க பிரதிமையையும், வெண்மை நிற பசு ஒன்றையும் தானம் செய்வது சிறப்பு. தானம் செய்யும் பொழுது, காம ரூபியான ஸ்ரீஹரி என்னிடம் அநுக்ரகம் உள்ளவராக வேண்டும்



### ஆஷாட சுத்த ஏகாதசி

**யதிகளும், துறவிகளும் ஆஷாட சுத்த ஏகாதசி முதற்கொண்டு, கார்த்திகை சுத்த ஏகாதசி வரை "சாதுர்மாச விரதம்" செய்ய வேண்டுமென்று சாஸ்திரம் நியமத்தை விதிக்கின்றது. அந்த நான்கு மாதங்கள் யதிகள், துறவிகள் தமது ஆசிரமங்களில் அநேகமான நியமங்களைப் பின்பற்றி உணவு முறையில் கடினமான நெறி முறைகளைப் பின்பற்றுவர். இதனை அவர்கள் தவறாமல் மேற்கொள்ள வேண்டிய நியமங்களில் ஒன்று எனச் சாஸ்திரம் சொல்கின்றது. வேதமும் சொல்கின்றது. தபசுவில் பிரம்மத்தை விசேஷமாகத் தெரிந்துக் கொள்ளும் தன்மையர்கள் ஆவார்கள். இதற்காகவே சாதுர்மாத விரதம் ஏற்படுத்தப் பட்டது.**

என்று பிரார்த்தித்து தானம் செய்ய வேண்டும். இப்படிச் செய்பவர்கள் எல்லா பாபங்களிலிருந்தும் விடுபட்டு விஷ்ணு லோகம் அடைகின்றனர். இதே திதிக்கு பத்ரு துவாதசி என்றும் பெயர் உண்டு. இப்படி சங்கல்பம் செய்து கொண்டு இவ்விரதம் நோற்பவர்களுக்கு தாம்பத்ய இன்பமும் நன்கு ஏற்படும் என்று கூறினார்.

வைகாசி மாத சுக்ல பக்ஷ ஏகாதசியில் மாதவனை பக்தியுடன் பூஜை செய்ய வேண்டும். பகவான் என்னிடம் கிருபை உள்ளவராக இருக்க வேண்டும் என்று பிரார்த்தித்து விரதத்தை முடிக்க வேண்டும்.

ஆனி மாத சுக்லபக்ஷ துவாதசியில் பகவான் திருவிக்ரமனை பூஜை செய்து பிராமண போஜனம் செய்விக்க வேண்டும். பகவான் திருவிக்ரமன் எனக்குப் பலவிபுலமான போகங்களையும், இறுதியில் வீட்டுப் பேற்றையும் தர வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

ஆவணி மாத சுக்லபக்ஷ துவாதசியை அநுட்டிப்பவன் பகவான் ஸ்ரீதரனை கந்த புஷ்பாதிகளால் ஆராதித்து, பிராமண போஜனம், தட்சணை முதலியவைகளைச் செய்து, "பகவான் ஸ்ரீதரன் என்மீது கருணை உள்ளவராக ஆக்கட்டும்" என்றும் பிரார்த்திக்க வேண்டும்.

புரட்டாசி மாத சுக்ல பக்ஷ துவாதசியை வாமன ரூபியான பகவானை ஆவாஹணம் செய்து, பூஜித்து தானங்கள் செய்து அன்னமளித்து பகவானுடைய ப்ரீதியைப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும். இந்த துவாதசியில் பாயசத்துடன் 12 அந்தணர்கள் பூஜிக்கும்படி நோன்பு விதிக்கிறது.

ஐப்பசி சுக்ல துவாதசியில் பத்மநாபனை பூஜை செய்து, அந்தணர்களை உண்பித்து, வஸ்திர, ஸ்வர்ண தானங்கள் செய்ய வேண்டும். இதனால் பத்மநாபனுடைய ப்ரீதி ஏற்பட்டு சுவேத த்வீப வாசிகளுடன் நல்வாழ்வும், இகத்தில் இவன் இச்சிக்கும் எல்லா போகங்களும் இவனுக்கு கிடைக்கும்.

கார்த்திகை மாத கிருஷ்ண பக்ஷ துவாதசிக்கு கோவத்ஸம் என்று பெயர். கன்றோடு கூடிய பசுவின் பிம்பத்தை தங்கத்தகட்டில் எழுதி சந்தன புஷ்ப மாலைகளால் அலங்கரித்து பூஜை செய்ய வேண்டும். பிறகு தாமிரப் பாத்திரத்தில் பழம், அரிசி எள் முதலியவைகளை வைத்து அர்க்யதானம் செய்ய வேண்டும். பாற்கடலில் உதித்தவளும், சர்வதேவர்களால் துதிக்கப்படுபவளும், தேவதானவர்களால் துதிக்கப்படுபவர்களும், தேவஸ்ரூபியுமாகிய தேவிக்கு நமஸ்காரம் தாயே! கோமாதா இந்த அர்க்யத்தை நீ ஏற்பாயாக என்று கூறி அர்க்ய நிவேதனம் செய்ய வேண்டும்.

பிறகு தாயே! ஜகன் மாதா! விஷ்ணு பதத்தில் இருப்பவளே! ஸர்வதேவி! நான் அளிக்கும் நிவேதனத்தை ஏற்று, என் இஷ்டங்களை பூர்த்தி செய்வாயாக என்று பிரார்த்திக்க வேண்டும். துவாதச பிராமண போஜனம் செய்வித்து அவர்களை தட்சணை முதலியவற்றால் திருப்திப்படுத்த வேண்டும். இப்படி பூஜிப்பவன் விஷ்ணு பக்தனாய், எல்லா இன்பங்களையும் அநுபவிப்பவனாய், ஆயுள் இறுதியில் விஷ்ணு ஸாயுஜ்யம் அடைகிறான்.

தொடரும்....

தெலுங்கு மூலம் : டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390
தமிழாக்கம் : திருமதி வி.உஷா, 99850 02156



**மலச்சிக்கல் நீங்க**

பாதாம் பருப்புப் பொடி, உலர்ந்த திராட்சை, கற்கண்டு பொடி ஆகிய ஒவ்வொன்றையும் 10 கிராம் அளவு எடுத்துக்கொண்டு, 30 கிராம் அளவு சுக்குப் பொடியுடன் தகுந்தளவு இதனைக் கலந்து மிக்ஸியிலோ அல்லது உரலிலோ போட்டு மிருதுவாக்கிக் கொள்ளவேண்டும். இதனை நாள்தோறும் இரவு உறங்கும்முன் 5–10 கிராம் அளவு எடுத்துக் கொண்டு, நன்கு மென்று விழுங்கி ஒரு குவளை நீர் பருக வேண்டும். இவ்வாறு செய்வதால் மலச்சிக்கல் நீங்கும்.

**முகத்தில் ஏற்படும் மச்சங்களுக்கு**

பாதம் பருப்புப் பொடியை முள்ளங்கி இரசத்துடன் கலந்து முகத்தில் பூசிக்கொண்டு, ஒரு மணி நேரம் கழித்து முகம் கழுவிக் கொண்டு வந்தால் முகத்தில் ஏற்பட்ட கருமச்சங்கள் மறையும்.

**இடுப்பு வலி குறைய**

பாதாம் பொடி, வறுத்த கசகசா பொடி, கற்கண்டு பொடி ஆகியவற்றை சம அளவில் கலந்து வைத்துக் கொண்டு, நாள்தோறும் இரண்டு வேளை 100 மி.லி. நீரில் 5 கிராம் பொடியைச் சேர்த்து உட்கொண்டால் இடுப்பு வலி தீரும்.

**சூட்டினால் ஏற்படும் இருமல் குறைய**

நாள்தோறும் இரண்டு வேளை எட்டு பாதாம் பருப்பை நன்கு இடித்து அதனுடன் தகுந்தளவு கற்கண்டு, வெண்ணெய் சேர்த்து சாப்பிட்டு வந்தால் இருமல் குறையும்.

**கண் பார்வை கோளாறுகளுக்கு**

பாதாம் பொடி 100 கிராம், வறுத்த கசகசாபொடி 50 கிராம், மிளகுபொடி 25 கிராம், கற்கண்டு 175 கிராம், தூய்மையான பசு நெய் 100–200 கிராம் ஆகியவற்றை நன்கு கலந்து வைத்துக் கொண்டு, நாள்தோறும் 2 வேளை ஒரு டீஸ்பூன் இம்மருந்தை 50 மி.லி. சூடான பாலில் கலந்து குடித்து வந்தால் கண் கோளாறுகள் நீங்கும்.

**கர்ப்பிணியின் ஆரோக்கியத்திற்கு**

பாதாம் பொடி 100 கிராம்,உலர்ந்த பேரிச்சம் பழப் பொடி 50 கிராம், உலர்ந்த திராட்சை 50 கிராம், ஏலக்காய் பொடி 10 கிராம் ஆகியவற்றை நன்கு பொடி செய்து கொண்டு நாள்தோறும் 1 டீஸ்பூன் பாலில் கலந்து குடித்து வந்தால் கர்ப்பிணிப் பெண்கள் ஆரோக்கியமாக இருப்பார்கள்.

**தூக்கமின்மையைப் போக்க**

இரவு உறங்கும் முன் 100 மி.லி. வெது வெதுப்பான பாலில் 1–2 கிராம் பாதாம்பொடி, ஒரு கிராம் ஜாதிக்காய் பொடி ஆகியவற்றை சேர்த்துக் குடித்தால் நல்ல தூக்கம் வரும்.

**நரம்பு தளர்ச்சி குறைய**

பாதாம் பொடி 100 கிராம், பனங்கற்கண்டு பொடி 100 கிராம், மிளகுப் பொடி 10 கிராம் ஆகியவற்றை எடுத்து, நன்றாகக் கலந்து வைத்துக் கொண்டு நாள்தோறும் பாலுடன் அரைடீஸ்பூன் அளவு கலந்து உட்கொண்டால் நரம்புத் தளர்ச்சி குறையும்.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிக்கும் முன் ஆயுர்வேத மருத்துவரை அணுகி ஆலோசனை பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தரத் தீர்விற்கு அல்ல.





# ஜூலை 2024
# ராசி பலன்கள்

- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.



### மேஷம்
தொழில் துறையில் நல்ல லாபம் கிடைக்கும். புதிய தொழில் முயற்சிகள் செய்யலாம். பதவி உயர்வு, திருமணம், பழைய பாக்கி வசூல் போன்றவை கை கூடும். புதிதாக வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. பழைய வாகனத்தை விற்றுப் புதிய வாகனம் வாங்கலாம். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெற்று நல்ல கல்லூரிகளில் சேர இடம் கிடைக்கும். நினைத்ததை சாதிக்கும் மாதமிது.

### ரிஷபம்
ஆரோக்கியத்தில் எச்சரிக்கை தேவை. யோசித்து முடிவு எடுக்க வேண்டும். மனைவி, குழந்தைகளின் ஆரோக்கியத்தில் எச்சரிக்கை தேவை. வேலைப்பளு அதிகமானாலும் எதிர்காலத்தில் நல்ல வாய்ப்பு காத்திருக்கிறது. நீங்களாக புதிய மருத்துவம் எடுத்துக் கொள்ள வேண்டாம். ஜூலை 20க்கு பிறகு வருமானம் கூடும். யாத்திரையால் நல் தரிசனம் கிட்டும். எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதமிது.

### மிதுனம்
குடும்பத்தில் சுபசெலவுகள் நடக்கும். குழந்தைகள் ஆரோக்யம் நன்றாக இருக்கும். தொழில் போட்டியில் உழைத்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் இடமாற்றம் உண்டு. தொழில் துறையில் புதிய முயற்சிகள் செய்யலாம். மாணவர்கள் கல்விக்காக வெளியூர் செல்ல வேண்டியிருக்கும். வெளிநாடு வேலை அமையும். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. பலவிதத்திலும் நல்ல பலன் கிட்டும் மாதமிது.

### கடகம்
தொழில் துறையில் புதிய முயற்சி வெற்றி கிட்டும். குழந்தைகள் நல்ல முன்னேற்றத்தைப் பெறுவர். மனைவி ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. கணவன்–மனைவி பிரச்சனை தீரும். யாத்திரை வெற்றி தரும். புதிய வாகனம் வாங்கலாம். பதவி உயர்வு கிட்டும். நல்ல மருத்துவத்தால் ஆரோக்கியம் மேம்படும். பலவிதத்திலும் இருந்த பிரச்சனைகள் தீரும் மாதமிது.

### சிம்மம்
குடும்பத்தில் செலவினங்கள் மிக அதிகமாக இருக்கும். தொழில் துறையில் நிச்சயம் நல்ல முன்னேற்றம் உண்டாகும். மனைவியின் ஆலோசனை பேருதவியாக இருக்கும். வாக்கு வாதங்கள் குறையும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டாகலாம். பெற்றோரால் நல்ல அனுகூலம் உண்டு. கடும் முயற்சிகளால் வெற்றி பெறும் மாதமிது.

### கன்னி
குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். தாய்–தந்தையரின் ஆரோக்கிய குறைபாடு நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தொழில் துறையில் இடமாற்றம் கிட்டும். நண்பர்கள், உறவினர்கள் உதவி செய்வர். பூர்வ புண்ணிய சொத்துக்கள் விரைவில் பிரச்சனையில்லாமல் கிட்டும். லாபநோக்கத்தோடு செயல்பட்டு வெற்றி பெறும் மாதமிது.

### துலாம்
இம்மாதம் தொழில் துறையில் புதிய முயற்சி செய்யலாம். கடன் வாங்குவதைத் தவிர்ப்பது நல்லது. காரமான, அஜீரணம் ஏற்படுத்தும் பொருட்களைத் தவிர்க்கலாம். மனைவி ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. குழந்தைகள் ஆரோக்கியம் நன்றாக இருந்தாலும் கல்வி செலவு கூடும். தொழில் போட்டியில் வெற்றி கிட்டும். எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதமிது.

### விருச்சிகம்
மனைவியின் ஆரோக்கிய குறைபாடுகள் நீங்கும். கூட்டு வியாபாரம் வெற்றி தரும். தாய்–தந்தையரின் ஆரோக்கிய குறைபாடுகள் நீங்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். வீடு, மனை, வாகனங்கள் வாங்கும் முயற்சியில் வெற்றி கிட்டும். திருமணம் கை கூடும். நண்பர்கள், உறவினர்கள் பிரச்சனை தீரும். தீமைகள் மறைந்து நன்மைகள் பெறும் மாதமிது.

### தனுசு
கல்விக்காக கடன் வாங்க வேண்டி இருக்கும். தொழிலில் சிறிது முடக்கம் ஏற்படும். மூத்த சகோதரர்களுக்கு நன்மையுண்டு. மனைவி ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. கணவன்–மனைவி கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு பின் சரியாகும். பெற்றோர் ஆதரவு உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். கடும் முயற்சியின் மூலம் போட்டியில் வெற்றி பெறும் மாதமிது.


### மகரம்
குடும்பத்தில் விரைவில் சுபச்செலவுகள் உண்டாகும். தன் கீழ் பணிபுரிபவர்களால் நன்மை உண்டு. ஆரோக்கிய குறைபாடுகள் நீங்கும். வாகனம், ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. பெற்றோர் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தக்க சமயத்தில் உதவிகள் கிட்டும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தீமைகள் விலகி நன்மைகள் பெறும் மாதமிது.

### கும்பம்
வேலைப்பளு அதிகமாகும். தொழிலில் அலைச்சல் இருந்தாலும் வளர்ச்சியுண்டு. ஆரோக்கிய குறைபாடுகள் நீங்கும். சகோதரர்களுக்கு நன்மை உண்டு. குழந்தைகள் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பேச்சில் கோபத்தைக் குறைக்கவும். மாணவர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. தொழில் துறையில் முயற்சிகளுக்குப் பிறகு வெற்றி கிட்டும் மாதமிது.

### மீனம்
வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. குழந்தை ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழிலில் முயற்சி வெற்றிதரும். வரவிற்கு ஏற்ற செலவு உண்டு. உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு, இடமாற்றம் உண்டு. மாத ஆரம்பத்தில் பிரச்சனைகள் ஏற்பட்டு பின்பு சரியாகும். மனைவியின் ஆரோக்ய குறைபாட்டிற்கு மருத்துவம் கிட்டும். முயற்சியால் முன்னேறும் மாதமிது.

# குருவருள் கிடைக்கப் பெற்ற மஹரிஷி

– முனைவர் பா. காயத்ரி, சென்னை.



திரேதா யுகத்தில் ப்ரசேதஸ் என்பவருக்கு “ரத்னாகர்” என்ற ஒரு புதல்வன் இருந்தான். சிறு வயதில் அவன் காட்டில் தொலைந்து போக, அக்காட்டில் வாழ்ந்த வேடுவத் தம்பதி அவனை வளர்த்தனர். அவனுக்கு வேட்டையாடக் கற்று கொடுத்து, தகுந்த வயதில் திருமணமும் செய்து வைத்தனர். அங்ஙனே அவனுக்கு ஓர் ஆண் குழந்தையும் பிறந்தது.

ஆனால், காலப்போக்கில் அவனால் வீட்டுச் செலவுக்கு பணம் சம்பாதிக்க இயலாததால் வழிப்பறியில் ஈடுபட்டான், காட்டில் வரும் வழிப்போக்கர்களிடம் பணம், நகை முதலியன திருடி, அவர்களைக் கொல்லவும் செய்தான். இங்ஙனே சிறிது காலம் போக, ஒரு நாள் அக்காட்டு வழியே, சப்த ரிஷிகள் வந்தனர். அவர்களின் கை, கால்களை கட்டி வைத்து, அவர்களிடமிருக்கும் பணம், நகை முதலியன கேட்க, அவர்களும் சாந்தமாக, தாங்கள் ரிஷிமார்கள் என்றும், தங்களிடம் ஒன்றுமில்லை என்றும் கூற, ரத்னாகரன் சப்த ரிஷிகளைக் கொல்லப் போனான்.

ரிஷிகள், அவன் மீது கருணைக்கொண்டு புன்முறுவல் பூத்தனர். அதிர்ச்சியான ரத்னாகரன், “பொதுவாக நான் கொல்லப்போகும் மனிதர்கள் அலறுவார்கள், அழுவார்கள், இல்லையேல் கெஞ்சுவார்கள். நீங்கள் என்ன வித்யாசமாக சிரிக்கிறீர்கள்” என்று எரிச்சலுடன் கேட்க, சப்த ரிஷிகளில் ஒருவர், “நீ ஏன் இதுபோன்ற பாவச் செயல்களைச் செய்கிறாய்?” என வினவ, அவன் தன் குடும்பத்திற்காக என்று பதில் அளித்தான். அப்போது ரிஷி, “அப்படி என்றால் நீ செய்யும் இத்தீஞ்செயல்களின் பாவத்தின் பாதி குடும்பத்தினர் ஏற்றுக் கொள்வார்களா?” எனக் கேட்டார். அவன் “நிச்சயமாக!” என்று கூற, அவர்கள் “நாங்கள் இங்கேயே கட்டுண்டு இருக்கின்றோம். நீ போய் கேட்டு வா” என்று அவனை அனுப்பி வைத்தனர்.


அவனும் ஓடோடிச் சென்று முதலில் தன் பெற்றோரிடம் வினவ, அவர்கள் அதிர்ச்சி உற்று “வயதான பெற்றோரைக் கவனிப்பது ஒரு புதல்வனின் கடமை. அதற்காக நீ இக் கொடிய செயல்களைச் செய்கிறேன் என்று கூறியிருந்தால், நாங்கள் அப்போதே மறுத்து இருப்போம். உன் பாவமூட்டையை நீதான் சுமக்க வேண்டும்” என்று கூறினர். அவன் துக்கத்துடன் மனைவியிடம் அதே கேள்வியைக் கேட்டான். அவளோ, “நான் உங்கள் மனைவி. உங்களை நம்பி வந்த என்னைப் பாதுகாப்பது உங்கள் கடமை. அதற்காக நீங்கள் செய்த பாவத்தை என்னால் சுமக்க முடியாது. ஒருவன் செய்த வினையின் பயன் அவனையே வந்தடையும்” என்றாள். கடைசி நம்பிக்கையாக தன் புதல்வனிடம் அதே கேள்வியைக் கேட்க, அவனோ “முடியாது” என்று கூறி ஓடிவிட்டான்.

உடனே சப்தரிஷிகளிடம் பாய்ந்தோடி அவர்களை விடுவித்து, அவர்களைச் சரண் அடைந்தான். அவர்களும், அவனை மன்னித்து குரு ஸ்தானத்திலிருந்து “ராமா” என்னும் தாரக மந்திரத்தை உபதேசித்தனர்.

ஆனால், தன் பாபச் செயல்களின் காரணமாக அவனால் அந்நாமத்தை உச்சரிக்கக்கூட முடியவில்லை. அதற்கும் ஒரு உபாயமாக "மரா, மரா, மரா..." என்று தலைகீழாக உச்சரிக்கச் சொல்லி அங்கிருந்து சென்றனர். ரத்னாகரனும் ஒரு மரத்தடியிலிருந்து "மரா, மரா, மரா...." என்று உச்சரித்து, காலப் போக்கில் அவன் பாபச் சுமை மறைந்துபோக, அது "ராம, ராம, ராம..." என்ற நாமமாகி, அதை ஜபித்து நற்கதியடைந்தார். இவரே, பிற்காலத்தில் "வால்மீகி" என்னும் மஹரிஷியாகி ஆதிகாவியமான "இராமாயணத்தை" இயற்றியவர். எனவே, நாமும் குரு உபதேசத்தை ஏற்று, முக்தியின் பாதையில் பயணித்து, பகவானின் பொற் பாதத்தை அடைவோம்!

– டாக்டர் கே.கே. ஏ.ரங்கராஜன், திருப்பதி

## நூல் மதிப்புரை



**புத்தகத்தின் பெயர் : பகவத் விஷய கட்டுரைகள் (பாகம்–1)**
**வெளியீடு : திருமால் பதிப்பகம்**
**விலை (அன்பளிப்பு) – ரூ.400/–**
**கிடைக்குமிடம் : திருமால் பதிப்பகம், எண்.6/35, கேசவப் பெருமாள் கோயில் கிழக்கு தெரு, மயிலாப்பூர், சென்னை – 4.**
**கைபேசி எண்: 99402 51975, 81485 68577.**

**51 தலைப்புகளைக் கொண்ட இந்நூல் ஸ்ரீமான் உ.வே. குமாரவாடி சே. ராமாநுஜாசாரியரால் உருவாக்கப்பட்டது. "சே.ரா" என்பதற்கிணங்க தனித்தன்மை வாய்ந்த பெரியார் ராமாநுஜாசாரிய ஸ்வாமிகள் – சமூகத்திலும் ஈடுபட்டு, வைணவ ஸம்ப்ரதாயத்திலும் கலந்து பரிமாறிய பெருந்தகை. "ஸ்ரீராமாநுஜர் வளர்த்த வைணவம்" என்று தொடங்கி எது பகுத்தறிவு என்று முடித்த இந்நூலை அனைவரும் வாங்கிப் படித்தல் வேண்டும். இதனால் என்ன பயன் என்பது நன்கு விளங்கும். பகவான் இராமாநுஜரைப் போல சமுதாயத்தையும் வளர்த்து ஸம்ப்ரதாயத்தையும் வளர்த்தவர் ஸ்ரீமான் உ.வே. சே.ரா. அவர்கள், எம்பெருமானார் தர்சனம் என்னே இதற்கு என்னும் பெயர் பெற்று நம்பெருமாள் கொண்டாடின இந்த ஸம்ப்ரதாயம் ஆழ்வார் ஆசார்யர்களால் வளம் பெற்றிருந்தாலும் இக்கால நிலைக்கேற்ப வளர்ப்பது என்பது மிகவும் கடினமான பணியாகும். இறைவன் விடும் கண்ணீர் என்னும் தலைப்பில் விருத்தி (தொழில்) சோறு உடம்போடே போம், உடம்பு மண்ணோடேபோம், ஆத்மா கர்மத்தோடேபோம், ஈச்வரன் கண்ண நீரோடேபோம் என்ற துணை தலைப்புகளில் ஆழ்வார்களின் அருளிச் செயல்களைக் கொண்டே விளக்கியுள்ளது போற்றத்தக்க தாயுள்ளது. இறுதியில் பிள்ளை லோகாசாரியாருடைய ஸ்ரீவசன பூஷணம் என்னும் சாஸ்த்ரத்தை மேற்கோள்காட்டியுள்ளது மிகவும் சாலச்சிறந்ததாக அமைந்துள்ளது (பக்.43–45).**

**தசாவதாரப் பெருமானில் எம்பெருமானின் அவதார விசேஷங்களை அவ்வவதார பெருமைகளை ஆழ்வார் திருவாக்குகளின் வாயிலாகக் காட்டியுள்ளது (பக். 67–83)மிக மிக அற்புதம். பெரியாழ்வாரின் ஸ்ரீவசன பூஷணம் என்னும் நூல் மூலமாக எம்பெருமானார் ரக்ஷகத்தையும் இந்த ஜீவாத்மா அப்பெருமானோடு கொண்டுள்ள உறவையும் விளக்கப்பட்டுள்ளது மிகவும் ஆணித்தரமான விளக்கம் (பக். 89–98).**


**இவ்வாறு அருமையான பல தலைப்புகளைக் கொண்ட இக்கட்டுரைத் தனித்தன்மை (சேரா) வாய்ந்த பெரியோரால் வெளியிடப் பெற்றது நாம் செய்த பாக்யம் என்றே சொல்ல வேண்டும். யாவரும் படித்துப் பயன் பெறுவார்களாக.**

**இவர் துறவறம் பூண்டு ஸ்ரீபெரும்பூதூரில் எம்பாராக அம்மடத்தை அலங்கரித்தவருடைய 100–வது திருநக்ஷத்திரத்தை முன்னிட்டு இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.**

# பல்சுவை பகுதி




## சித்திரப் பகுதி



படத்தைப் பாருங்கள் !

வண்ணம் தீட்டுங்கள் !!














1) குரு - சீடன் தொடர்புடையவை
2) ஆடி மாதத்திற்குரியவை
3) சயன ஏகாதசி-மஹாவிஷ்ணுவுடன் தொடர்புடையவை

*மேலே குறிப்பிட்ட பண்டிகை மற்றும் பருவ தினங்களுக்குப் பொருத்தமான சித்திரங்களுக்குரிய வட்டத்தில் அந்தந்த எண்களை எழுதுங்கள்*

## வார்த்தைகளைச் சரியாக எழுதி "ஆத்திசூடி"யைப் படிப்போமா!

ஆடேல் அனந்தன், மற கடிவது, விரதம் காப்பது, பட கிழமை வாழ்

அனந்தன் ஆடேல், கடிவது மற, காப்பது விரதம், கிழமை பட வாழ்

## குருவைச் சென்றடைய சீடனுக்கு கீழே கொடுக்கப்பட்ட விதமாக வழிகாட்டி உதவுங்கள்



கணித விடைகள் 5 என்ற எண்ணிக்கையில் வரும் கட்டங்களை மட்டும் இணைத்து பாதையைக் காட்டுங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7 −2 | 8 −3 | 6 −4 | 5 +0 | 12 +4 | 8 −2 | 5 +10 | 7 −6 |
| 10 −2 | 2 +3 | 8 −3 | 8 −2 | 13 +5 | 7 −5 | 12 +2 | 9 −2 |
| 16 +4 | 5 −2 | 9 −4 | 10 −5 | 15 −10 | 1 +4 | 12 −7 | 9 −2 |
| 15 +2 | 7 −2 | 18 +3 | 3 +2 | 4 +1 | 19 +1 | 19 −14 | 0 +5 |



## சரியான பாதையைக் கண்டுபிடி




புத்த கயா, நாளந்தா, வைசாலி, பாட்னா அமைந்து உள்ள மாநிலம்

பீஹார்

வினாடி வினா



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-24

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. ஆந்திர மாநிலம் வால்மீகி புரத்தில் எழுந்தருளும் பிரான் ..............................
2. இராமாநுஜ நூற்றந்தாதியை இயற்றியவர் ..............................
3. அசுரனான சூரபத்மனை வதம் செய்தவர் ..............................
4. “சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே” என்று கூறும் நூல் ..............................
5. கிருஷ்ணத்வைபாயனார் என்ற இயற்பெயர் கொண்டவர் ..............................
6. திருத்தணிகை முருகன் பிள்ளைத்தமிழ் பாடியவர் ..............................
7. எதிகட்கு இறைவன் எனப் போற்றப்படுபவர் ..............................
8. அறுசமய செடியதனை அடி அறுத்தவர் ..............................
9. வாழ்க்கையை பொம்மலாட்டம் என்று கூறியவர் ..............................
10. விஷ்ணு சித்தர் என்று போற்றப்படுபவர் ..............................
11. குருசரணம் நினைவாய் நெஞ்சே என்றவர் ..............................
12. திருக்கள்வனூர் திவ்ய தேச தீர்த்தம் ..............................
13. சனத்குமாரர்களுக்கு உபதேசம் செய்தவர் ..............................
14. சுக்ராசாரியாரின் மகளான தேவயானியை மணந்தவன் ..............................
15. பெரியாழ்வார் அவதரித்த மாதம் நட்சத்திரம் ..............................


## போட்டிக்கான நிபந்தனைகள்



- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati - 517 507'' என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.07.2024.

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| | |
|---|---|
| ஸப்தகிரி சந்தா எண் | |
| போட்டியாளர் பெயர் | |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை | |
| போட்டியாளரின் வயது | |
| போட்டியாளர் முழு முகவரி | |
| தொலைபேசி எண் | |




1) ஜெகந்நாதர், 2) சுபத்திரை, 3) பலபத்திரர், 4) வங்காளவிரிகுடா,
5) சுதர்சன சக்கரம், 6) இரத யாத்திரை, 7) ஒரிசா மாநிலம், 8) குண்டிச்சா.

**விடைகள்**




**உயிரெழுத்து (12), மெய்யெழுத்து (18), ஆயுத எழுத்து (1), உயிர்மெய் எழுத்து (216) க்களை கொண்ட அமுதத்திற்கும் மேலான தெய்வத் தமிழ் மொழியைப் பயின்று தமிழைச் சிகரத்தின் உச்சாணிக்குக் கொண்டுச் செல்வோம்.**

குழந்தைகளே! இந்தச் சித்திரத்தில் ஒரு தவறு உள்ளது. அதை என்னவென்று கண்டுபிடித்து கீழே உள்ள கட்டத்தில் எழுதி மகிழவும்.

சுண்ணக்கோல் (சாக்பீஸ்)


**விடை**

## நல்லதையே செய்வோம் !





காட்டின் அரசன் சிங்கம் மரத்தடியில் தூங்கிக்கொண்டிருக்கும் போது ஓர் எலி அதன் மீது துள்ளிக்குதித்து விளையாடியது. சிங்கம் கோபத்துடன் அதை பிடித்து "உன்னை தின்றுவிடுவேன்" எனக் கூறியது. எலியும், "என்னை விடு; நான் உனக்கு உதவி புரிவேன்" என்றது. சிங்கமோ "உன்னால் என்ன உதவ முடியும்?" எனச் சிரித்தபடி அதனை விட்டுவிட்டது. ஒருநாள் வலையில் அகப்பட்ட சிங்கத்தை எலி தன் பற்களால் வலையைக் கொறித்து வலையிலிருந்து சிங்கத்தை விடுவித்தது. நான் சொன்னவண்ணம் உனக்கு உதவி செய்தேன் என்றது எலி. சிங்கம் தன் தவறை உணர்ந்து ஆனந்தம் அடைந்தது.



# தெய்வ நிந்தனை பெரும் பாவம்

சித்திரக் கதை

கதை மூலம் :திருமதி வாவிலாவ நாகவல்லி
சித்திரம் :திரு. கே. துவாரகாநாத்

சிசுபாலன் தாமகோஷா, சாத்வதி தம்பதியரின் மகனாவான். இவனுக்கு ஸ்ரீகிருஷ்ணருடன் பகை உண்டானது. கிருஷ்ணரும், தன் சக்கராயுதத்தால் இவனை அழித்தார். இந்த சிசுபாலனின் வரலாற்றை அறிவோம் வாருங்கள்.





சிசுபாலன் வளர்ந்து பெரியவனானான். ஒருநாள் தர்மராஜன் ராஜசூய யாகத்தை நடத்தினார். அந்த யாகத்திற்கு சிசுபாலனும் சென்றான். ராஜசூய யாக பலத்தினை ஸ்ரீகிருஷ்ணருக்கு அளிக்க தர்ம ராஜன் ராஜ சபையைக் கூட்டினான். அப்போது தர்மராஜன்...
கிருஷ்ணா! பரந்தாமா! ராஜ சூய யாகப் பலனை ஏற்றுக் கொள்ளுங்கள்.
அப்படியே! தர்மராஜா.
அதனைக் கண்ட சிசுபாலன் வெகுண்டெழுந்து...
தர்மராஜா! யாகத்தின் பலனை ஏற்கும் தகுதி கிருஷ்ணனுக்கு உண்டா? அவனுக்கு அளிக்காதே. அதற்கு நான் ஒப்புக்கொள்ளவே மாட்டேன். அவன் பெரும் மாயாவி.
அப்போது சிசுபாலன் கூறியதைக் கேட்ட பீஷ்மர் கோபத்துடன்...
சிசுபாலா! தெய்வத்தை நிந்திக்காதே! இச்செயல் நல்லதல்ல. பொறுமையாக இரு.
பீஷ்மா! நீ யார் என்னைக் கேட்க. நான் அந்த மாடு மேய்ப்பவனை விட மாட்டேன்.
இப்படியே பல முறை சிசுபாலன் நூறு தவறுகளைச் செய்தான்.
சிசுபாலா! உனக்கான நூறு தவறுகள் முடிந்து விட்டன. என் சக்ராயுதம் உன் கழுத்தை அறுத்து மரணத்தை அளித்திடும். சக்கரமே விரைந்துச் சென்றவனை அழித்திடு.
அப்படியே ஸ்வாமி!
கிருஷ்ணா தீயவனை அழித்து உலகினைக் காத்திட்டாய். இதோ இந்த யாகப் பலனை தாங்கள் ஏற்று எங்களுக்கு அருள் புரியுங்கள்.
அப்படியே தர்மராஜா. எல்லாம் வெற்றியாகட்டும்.
பரம பாக்கியம் பெற்றோம் ஸ்வாமி!
எச்சூழ்நிலையிலும் தெய்வ நிந்தனைக் கூடாது. தெய்வ நிந்தனை நம்மையே அழித்து விடும்.
சுபம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _______________
(பெரிய எழுத்துக்களில்) _______________

_______________

_______________

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/-(12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ)
ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை
எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஓ.,ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2ஆம் தளம்,தி.தி.தே.அச்சகக்கட்டடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.













13-06-2024 அன்று குடும்பத்தினரோடு திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயாரைத் தரிசிக்க வருகை புரிந்த மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு. நாரா சந்திர பாபு நாயுடு அவர்களை பூர்ண கும்ப மரியாதையுடன் வரவேற்ற அர்ச்சக சுவாமிகள். பின்னர் தாயாரைத் தரிசித்த மாண்புமிகு முதல்வர் தம்பதியினருக்கும், ஆ.மா. அமைச்சர் (எச்.ஆர்., ஐ.டி.,ஆர்.டி.ஜி.) திரு. நாரா லோகேஷ் தம்பதியினருக்கும் வேத ஆசிர்வாத மண்டபத்தில் தீர்த்தப்பிரசாதத்தை வழங்கும் தி.தி.தே. இணைச் செயலாட்சித்தலைவர் திரு. வீ. வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள் உடன் உயர்அதிகாரிகள், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்.

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-06-2024 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.



வியாச (குரு)
பௌர்ணமி
21-07-2024